# மனமோகி

2

ஏப்ரல்-மே இதழ்

2013

அனுஷ்காவின்
பெண்ணுரிமைக்கான குரல்
எஸ்.எஸ்.ஆர்.



ஏடுகளில் திறனாய்வு:
கே.எஸ். சிவகுமாரன்

பீஷ்மரும் பெண்கள்
பற்றிய ஒரு சர்ச்சையும்:
ஐராவதி கார்வே



கண்டியிலிருந்து
ஒரு குறும்படப் பதிவு
ஆர். பரமேஸ்வரன்


மாற்றுச்சிந்தனைக்கான

காலாண்டு இலக்கிய இதழ்

With Best Compliments From:

# Apsaras Steels

*Wholesale & Retail Dealers in Hardware Items*



73, New Town, Digana,
Rajawella

Tel: 081 2375865, 2374668


# மனமோகி

மாற்றுச் சிந்தனைக்கான..
காலாண்டு இலக்கிய இதழ்

சிறகு

வெளியீடு


மலர்.2 ஏப்ரல்-மே இதழ்-1 2013

ஆசிரியர்
**ரா.நித்தியானந்தன்**

ஆசிரியர் குழு
**இரா.அ. இராமன்**
**எஸ்.எஸ் .ராஜேந்திரா**

வடிவமைப்பு
**எம்.கௌரி ஹர்ஷினி**

ஆலோசகர்
**அந்தனி ஜீவா**

**மனமோகி**
**334/E. பலகொல்ல**
**கெங்கல்ல**
**(இலங்கை)**

தொலைப்பேசி
0776146229

Email: anugoolannithy@gmail.com

அச்சிட்டு வெளியிடுபவர்
**சிறகு பப்ளிகேசன்**
**கண்டி**

விலை ரூபாய்: 65.00


## கட்டுரைகள்


பீஷ்மரும் பெண்கள் பற்றிய
ஒரு சர்ச்சை, யுகந்தாவிலிருந்து
– ஐராவதி கார்வே

வேசிகளைப் பற்றிய சித்திரம்
– யசோதா

புதுமைப்பித்தனின் அகல்யை
மீள் வாசிப்பின் மீள் வாசிப்பு
-ரா.நித்தியானந்தன்

மத அடிப்படைவாதிகளால்
நலிந்து வரும் இஸ்லாமிய சமூகம்
–ஸர்மிலா செய்யதத்

பெண்களுக்கான சித்தார் மேதை
அனுஷ்காவின் குரல்
-எஸ். எஸ். ராஜேந்திரா

ஆர். கே. டேவிட்டின் சிறுகதை
லெனின் மதிவானம்

மனமோகி –கே. எஸ் சிவகுமாரன்
கண்டி- ஏ.சந்தியாகோ

**கவிதை**

வளி அடைப்பு
– செ. சுதர்சன்

ஒரு பசு மாட்டின் சுய சரிதை
-ரா நித்தியானந்தன்

காணாமல் போகும் நட்பு
-ஆர். ருஷாந்த பிரியா

நானும்,அவளும்

இந்த சிருஷ்டி அழகானதா?
இரா. சடகோபன்

Not with out my Daughter
ஆங்கில நாவல் -ஆர். ஏன்

**குறும் பட விமர்சனம்**

கண்டியிருந்து ஜானு பிருத்வியின்
ஒரு குறும்படம்
ஆர் .பரமேஸ்வரன்

**நூல் அறிமுகம்**

எனது நூலொன்றின் அறிமுகம்
கே. எஸ். சிவகுமாரன்

**சினிமா**

ஓஸ்கார் விருதினை வென்ற ஈரானிய
திரைப்படம்
ரிசான் ஷெரீப்

சிறுகதை
சத்தமில்லா யுத்தங்கள்
சந்திரவதனா செல்வகுமாரன்

# ஆசிரியர்பீடம்

## மாற்றுச் சிந்தனையாளர்களை தேடும் பணி

மனமோகியின் இரண்டாம் இதழை உங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்வடைகின்றோம். மனமோகியின் இதழ் ஒன்றில் எமக்கு மிகப் பெறும் அனுபவங்களையும், புதிய சிந்தனைகளையும் பகிர்ந்துகொண்டதுடன் சிறுசஞ்சிகை தொடர்பான நடைமுறை சார்ந்த புரிதலை எம்முள் ஏற்படுத்தியுள்ளது. இவ்விதழ் வெளிவந்த பின்னர் எழுத்தாளர்கள், வாசகர்கள், ஆர்வலர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற கருத்துரைகள் ஆலோசனைகள் கனதியான கருத்து பரிமாறல்கள் என்பன எமது பார்வையை தெளிவுபடுத்தியுள்ளன.

எது எவ்வாறெனினும், எம்முன் முறுகிக் கொண்டு நிற்பது மாற்றுச்சிந்தனை எழுத்துக்கள். எமது சிந்தனையின் பிரதிபலிப்பு தான் மாற்றுச் சிந்தனை. மரபு சார்ந்த அடிப்படையில் இன்னும் எவ்வளவு காலம் தான் எழுதிக் கொண்டிருக்கப்போகிறோம்? இநத தன்மைகளில் இருந்து புதுமையை கண்டு கொள்ள முற்படுகின்ற போது தான் பழைமை நிலைபெறும், வலிமை பெறும். அந்த அடிப்படையிலேயே மனமோகி மாற்றுச் சிந்தனையின் படைப்பாக்கத்தை எதிர்ப்பார்கின்றது. ஆனால் களத்தில் நின்று பார்க்கின்ற போது மாற்றுச் சிந்தனைக்கான படைப்புகளின் வருகை மிகக் குறைவானதாகவே இருக்கின்றது. எனவே சிற்றிதழ் படைப்பாளன் என்ற வகையில் எவ்வாறு மாற்றுச் சிந்தனையாளர்களை முன்னிருத்துவது? என்பது இங்கு கேள்விக் குறியாய் நிற்கின்றது. ஆனால் நாம் மேற்கொண்ட கதையாடல்கள் மற்றும் கடிதங்கள் மாற்றுச் சிந்தனைக்கான வாசகர்களின் எதிர்ப்பார்க்கை ஆரோக்கியமானதாகவே காணப்படுகின்றது. இதனால் நாம் ஒருபோதும் சோர்ந்துவிடப் போவதில்லை. மனமோகி மாற்றுச்சிந்தனையாளர்களை ஓர் அணியாக திரட்ட முயல்கின்றது. அதற்கு மாற்றுச்சிந்தனையாளர்கள், மாற்றுச் சிந்தனையுள்ள படைப்பாளர்கள், மாற்றுக் கலைப்படைப்பாளர்கள், மாற்றுச் சிந்தனையுள்ள வாசகர்கள் என்போரை இனங்கண்டு கொள்வது எமது இன்றைய தலையாய இலக்கிய பணியென நாம் கருதுகின்றோம் எமது கதையாடல் பலவற்றில் மாற்றுச்சிந்தனை என்றால் என்ன என்பது தொடர்பாக வரையரையொன்று வேண்டப்பட்டது. ஆனால் மாற்றுச் சிந்தனை என்றால் என்ன என்பதை அதன் இதழியல் பண்புகளிலேயே வாசகர் புரிவாரென நாம் நம்புகிறோம். அதற்காக மனமோகி இப்போது முழுமையாக மாற்றுச் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்ட்து என்பதும் எமது கருத்தல்ல. அது எதிர் காலத்தில் நிறைவுபெறும். அந்த முயற்சியும் மிக சிரமமானது தான். அந்த சிரமமான பணிக்கு நீங்கள் உதவுவதன் மூலம் எமது அணியில் சேருங்கள் என்பதே எமது வேண்டுகோள்.





# பீஷ்மரும் பெண்களும் பற்றிய ஒரு சர்ச்சை யுகந்தாவிலிருந்து. . .

ஜராவதி கார்வே

மகாபாரதப் போர் பீஷ்ம பருவத்தில் ஆரம்பமாகிறது. இக்கட்டுரையை படிக்கும் போது சண்டையின் ஆரம்பத்தில் அதை நிறுத்த பீஷ்மர் பெரிய முயற்சி எதுவும் செய்யவில்லை என்பதை நாம் முழுவதும் உணர்வோம். பீஷ்மரின் முழு வாழ்க்கையும் எந்தவித பயனுமில்லாத தியாகம். ஆனால் அவர் வாழ்வின் இந்தக் கடைசி பத்து நாட்கள் பயனின்மை மற்றும் தியாகத்தின் உச்சத்தை அடைகிறது. வாழ்க்கையில் அவருக்கு நியாயமாகக் கிடைத்த எல்லாவற்றையும் துறந்த பிறகும் முதுமை யின் எல்லைக்குப் போனபின்பும் கௌரவர்களின் படைத் தலைவராக பொறுப் பேற்க ஏன் சம்மதித்தார்? இந்தக் கேள்வி படிப்பவரை எப்போதும் தொல் லைப்படுத்திக்கொண்டிருக்கும். ஆனால் அவருடைய வாழ்க்கை முழுவதையும் நாம் ஆராயும் போது ஒரு முடிவுக்கு வருவோம். அவருடைய கடைசி காலத்துச் செயல்கள் அவரு டைய வாழ்க்கையுடன் பொருந்தியது மட்டுமல்லாமல், அவரால் தவிர்க்க முடியாமலும் போயிற்று.

மனித வாழ்க்கையின் அனைத்து முயற்சிக்கும் எந்த அர்த்தமும் இல்லை எல்லா மனித வாழ்க்கையும் விரக்தியில் தான் முடியும் என்பது தான் மகாபாரதம் நமக்கு கற்றுத்தரும் பாடமா? மனிதனின் கடுமையான உழைப்பு, எதிர்ப்பார்ப் புகள், வெறுப்புகள், நட்பு எல்லாமே அற்பமாகவும் உண்மையற்றதாகவும் காற்றில் உதிரும் ஆனால் கடுமையாக உழைப்பவர்கள் கனவு காண்பவர்கள் அன்பைப் பொழிபவர்கள், வெறுப்பை உமிழ்பவர்கள் எப்போதும் மறக்காமல் இருப்பார்கள். அவர்களுடைய நினைவு தொடர்ந்து இதயத்தை துளைத்துக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் வசப்படாத ஒரு தீர்மானமான முடிவை நோக்கிச் செல்வதை நாம் ஒவ்வொருவரும் மகாபாரதத்தைப் படிக்கும் போது பார்க்கலாம். ஒவ்வொருவரும் தம் முடிவை அறிவானென்றும், அவனுடைய துயரமும் வெறுப்பும் நம்முடையது போல் தோன்றும். ஒவ்வொருவரின் துயரத்தின் மூலம் நாம் உலகம் முழுவதுமுள்ள துயரத்தை அறிகிறோம்.

பீஷ்மரின் வாழ்க்கை முழுவதும் வெளிப்படையான முரண்பாடுகள் கொண்டவை. ஆனால் எல்லா முரண்பாடுகளுக்கு அப்பாலும் அவர் செய்கையிலும், யோசனையிலும் ஒரு வித ஒழுங்கு இருந்தது. பீஷ்மர் ஒரு சபிக்கப்பட்ட பிறவி, அவருடைய தோழர்கள் கங்காதேவியால் சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் பீஷ்மரோ உலகத்தில் பிறவி எடுப்பதற்காகத் தள்ளப்பட்டவர். சில காரணங்களால் கங்காதேவியும் பூமியில் தவிர்க்க முடியாமல் சிலகாலம் வாழ நேர்ந்தது. அதே சமயத்தில் ‘ வசித்தா’ வினால் எட்டு வசுக்கள் மனித அவதாரம் எடுக்கும்படி சபிக்கப்பட்டவர்கள்.

கங்காதேவியைப் பார்த்து, ' நாங்கள் உங்கள் வயிற்றில் பிறக்கிறோம். பிறந்தவுடன் எங்களை கொன்று நிச்சயமற்ற உலகத்திலிருந்து விடுதலை கொடுங்கள்' என்று வேண்டிக் கொண்டனர். கங்காதேவியும் அவ்வாறு உறுதி அளித்தாள். தேவர்கள் இந்த உலகத்தில் பிறவி எடுக்க தயாரானார்கள். கங்காதேவி ஒரு பெண் தெய்வம், எப்போதும் இளமையாக இருப்பவள். பூமிக்கே உரிய சாதாரண வரைமுறைகள் அவளுக்குப் பொருந்தாது. இந்தப் பெண் பூமிக்கு இறங்கி வந்தாள். நேரிடையாக 'பிரதீபா' என்ற அரசனின் மடியில் போய் அமர்ந்து சொன்னாள். " நான் உன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன்." அரசனும் அதற்கு பதில் சொன்னான். " பெண்ணே நீ என்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்பியிருந்தால் என் இடப்பக்கத் தொடையில் அமர்ந்திருக்க வேண்டும். வலது பக்கம் அல்ல. ஏனெனில் வலது பக்கத் தொடை மகனுக்கும் மருமகளுக்கும் உரியது. எனக்கு ஒரு மகன் பிறக்கட்டும். அவனை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்." கங்காதேவியும் இதற்கு ஒப்புக்கொண்டாள். பிரதீபாவிற்கு சந்தனு என்ற மகன் பிறந்தான். அவன் பெரியவனானவுடன் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் கொடுத்துவிட்டு, பிரதீபா காட்டிற்குச் சென்று விட்டான். சந்தனு மற்ற ஷத்திரிய அரசர்களைப் போல், வேட்டையாடுவதில் விருப்பம் உள்ளவன். கங்கைநதிக்கரையில் அவன் வேட்டையாடிக் கொண்டிருக்கும் போது, அந்த அழகான பெண்ணைப் பார்த்தான். வேட்டையாடியவன் பிடிபட்டான்! இந்தப் பெண் தான் கங்காதேவி, அவனைத் திருமணம் செய்துகொள்ள அவள் சம்மதித்தாள். ஆனாலும் மணக்க சில தேவ கன்னிகைபோல் நிபந்தனைகள் இட்டாள். "ஓ! அரசனே! நான் என் விருப்பப்படி சிலவற்றை செய்வேன். நான் செய்யும் சில செயல்கள் உங்களுக்கும் சரியாகப்படாது. அதற்காக என்னைத் தடுக்கவும் நிந்திக்கவும் கூடாது. அவ்வாறு ஏதாவது ஒரு நாள் நீவீர் செய்வீர்களானால் நான் உம்மைவிட்டு விலகிப் போய்விடுவேன்!" காதல் வசப்பட்ட அரசன் எல்லாவற்றுக்கும் ஒப்புக் கொண்டான். கங்கை அவன் மனைவியானாள். மகாபாரதத்தின்படி எல்லாவித சந்தோஷங்களையும் கங்காதேவி அவனுக்குத் தந்தாள். ஆனால் ஒவ்வொரு சமயமும் பிறக்கும் குழந்தையை ஆற்றுக்கு எடுத்துச்சென்று மூழ்கடித்து விடுவாள். சந்தனு மகாராஜா அவளுக்கு அடிமை யாக இருந்ததால், இது குறித்து ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அவள் தன்னுடைய எட்டாவது குழந்தையை அவ்வாறு செய்யத் துணிந்த போது, அவனால் அனுமதிக்க முடியவில்லை. ' நீ ஒரு கொடூரமான பெண்! தயவு-செய்து இந்தக் குழந்தையைக் கொல்லாதே' என்று பதட்டத்துடன் கூறினான். கங்காதேவி இத்தருணத்திற் காகத்தான் காத்திருந்தாள். ' நான் இந்தக் குழந்தையை விட்டுவிடுகிறேன். ஆனால் நாம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி நான் உன்னை விட்டுப் பிரிகிறேன்' என்று கூறியபடி குழந்தையை எடுத்துக் கொண்டு மறைந்துவிட்டாள். மனைவியும், குழந்தையும் போன பிறகு சந்தனு மகாராஜா திரும்பவும் வேட்டையாடச் சென்றான். ஒரு நாள் கங்காதேவி அவன் முன் தோன்றி, அவனுடைய மகன் தேவவிரதனை அவனிடம் ஒப்படைத்தாள். அவன் ஒரு



வாலிபனாக அனைத்து ஷத்திரிய கலை களையும் கற்றவனாக இருந்தான். சந்தனு அவனைத் தன்னுடைய தலை நகருக்கு அழைத்துச் சென்றான். இளவரச பட்டாபிஷேகம் செய்வித்தான். தேவவிரதனின் நல்ல பழக்க வழக்கங்கள் மக்களிடையே அவனை செல்வாக்குப் பெறவைத்தது. உலகத்தைத் துறக்க வேண்டிய இந்தப் பிறவி, மிகப்பழமையான அரச பீடத்தில் அரசனாக மாட்டிக்கொண்டது.

நான்கு வருடங்கள் சென்றன. சந்தனு மகாராஜாவிற்கு முன் எப்போதும் போல் வேட்டையாட ஆசை ஏற்பட்டது. இந்த வயதான காலத்திலும்கூட ராஜாவிற்கு ஒரு அழகான பெண்ணின் மீது மையல் ஏற்பட்டது. அந்தப் பெண்ணின் பெயர் சத்தியவதி 'தசாராஜ்' என்ற செம்படத் தலைவனின் பெண். இந்த முறை பெண்ணின் தகப்பனான செம்படத் தலைவன் அவளைத் திருமணம் செய்துகொள்ள ஒரு சத்தியம் செய்யும்படி கேட்டுக் கொண்டான். அந்தச் சத்தியம் முழுக்க முழுக்க நடைமுறையில் இருக்கக்கூடிய உலக ரீதியானது. அதனால் தேவவிரதனின் வாழ்க்கை புதிய வழியில் திரும்பியது.

"என் பெண்ணை உங்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கிறேன். ஆனால் அவள் மகன் தான் அடுத்த அரசனாவான் என்று எனக்கு சத்தியம் செய்து தரவேண்டும்" என்றான் செம்படத்தலைவன். சந்தனுவால் இந்த நிபந்தனையை ஏற்க முடியவில்லை. துக்கத்துடன் தன் தலைநகருக்கு திரும்பினான். தன் தந்தை துக்கத்தில் ஆழ்ந்திருப்பதற்கான காரணம் என்ன வென்று அறிந்து கொள்ள தேவவிரதன் முயற்சி செய்தான். சந்தனு பதிலோ மழுப்பலாக இருந்தது. "மகனே நான் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது. அரசாளும் சகல திறமைகளும் வாய்ந்தவன் நீயாக இருந்தபோதும் ஒரேயொரு விஷயந்தான் என்னை உறுத்துகிறது. நீ என் ஒரே புதல்வன். உனக்கு ஏதாவது ஆகிவட்டால் நமது அரசு என்னாகுமோ?"

இளவரசன் தந்தையின் அந்தரங்க உதவியாளர்களைக் கூப்பிட்டு முழு கதையையும் தெரிந்து கொண்டான். சந்தனுவிடம் சொல்லாமல் மந்திரி யுடனும் மற்றும் சில அலுவலர் களுடனும் செம்படத் தலைவன் தசாராஜைப் போய்ப் பார்த்தான். அவன் மகள் சத்தியவதியைத் தகப்பனாருக்காகப் பெண் கேட்டான். தசாராஜா தன் நிபந்தனைகளை தேவவிரதனிடம் கூற தேவவிரதன் அங்கு கூடியுள்ள மக்களிடம் ' நான் இந்த இராஜ்ஜியத்தைக் கோர மாட்டேன்' என்றான். இதைக் கேட்டும் தசாராஜா திருப்தி அடை யவில்லை. "நீவீர் சொல்வது சரிதான். ஆனால் உமக்குப் பிறக்கும் புதல்வர்கள் ராஜ்ஜியத்திற்காக என் பெண்ணுடைய புதல்வர்களுடன் சண்டையிடலாம் அல்லவா?" உடனே இளவரசன் இன்னொரு சத்தியமும் செய்தான். அது முதல் சத்தியத்தைவிடச் சிரமமானது. ' நான் திருமணம் செய்துகொள்ளாமலேயே என் வாழ்நாளைக் கழித்து விடுவேன்' என்றான்

இந்தக் கடுமையான சத்தியத்தால், தேவவிரதனை எல்லோரும் 'பீஷ்மா' ' அற்புதமான செயலை செய்யத் துணிந்தவன்' என்று அழைத்தனர். தசாராஜா திருப்தி அடைந்தான். தன் பெண்ணை பீஷ்மரிடம் ஒப்ப டைத்தான். பீஷ்மரும் 'அம்மா வாருங்கள என அவளைத் தன்

தேரில் நாட்டின் தலைநகருக்கு அழைத்துச் சென்றார். தன் தந்தைக்கு மணம் முடித்து வைத்தார்.

இந்த அசாதாரண தியாகத்தினால், சந்தனு சந்தோஷத்துடன், பீஷ்மன் தான் எப்போது இறக்க வேண்டுமென்று நினைக்கிறானோ அப்போது இறக்கலாம் என்ற வரத்தை அளித்தான். இந்த தியாகத்தினால் பீஷ்மருக்குக் கிடைத்தது என்ன? விரும்பும் போது இறப்பது. பீஷ்மரின் தியாகம் எந்த பிரதிபலனையும் எதிர்ப்பாராமல் செய்யப்பட்டது. அவர் ஒரு சபிக்கப்பட்ட பிறவி என்பது அவருக்கே தெரியாது. கங்காதேவி இந்த இரகசியத்தை சந்தனுவிடம் சொல்லியிருந்தாள், அவர் சாதாரணமாக இந்த உலகத்தில் பிறந்திருந்தால் பிறவியிலிருந்து சீக்கிரம் விடுபட முயன்றிருப்பார். அரச பதவி திருமணம் என்பவற்றிலிருந்து விடுதலை, விருப்பப்பட்ட போது இறப்பு என்றெல்லாம் இருந்ததால் பீஷ்மர் இந்த உலகத்தைவிட்டுபோகசுதந்திரமாக இருந்தார். கூண்டுப்பறவை விடுதலையைக் கண்டு பிடிக்கத்தான் செய்தது. ஆனால் பீஷ்மருடன் உருவான விதியால் பீஷ்மரின் தளையிலிருந்து திரும்பவும் விடுபடமுடியாமல் போய்விட்டது.

சத்தியவதிக்கு இரண்டு புதல்வர்கள் பிறந்தார்கள். அவர்கள் சிறுவர்களாக இருக்கும்போதுசந்தனு இறந்துவிட்டான். பீஷ்மர் தன் இளம் வயதான சிறிய தாயாரையும், குழந்தைகளையும் விட்டுப்பிரிய மனமின்றி வாழ்க்கையில் எதிர் வரும் பிரச்சினைகளை சந்திக்கத் தயாரானார். இரண்டு தலைமுறைகளுக்கு அவர் அரசனாக இல்லாவிட்டாலும் நாற்பது ஆண்டு கால அரச அதிகாரத்தை நடத்தினார். தான் திருமணம் செய்துகொள்ளாததால் இரண்டு தலைமுறைகளுக்கான மணப் பெண்களை தேர்ந்தெடுப்பதற்கான தொல்லைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சத்தியவதியை அழைத்துவந்து தன் தந்தைக்கு மணமுடித்து வைத்த நாள் அவர் பின்னாளில் உள்ள வாழ்க்கைக்குமுன்னுரையாகஅமைந்துள்ளது.விசித்திரவீரியன்,திருதராஸ்டிரன், பாண்டு, விது ரன் முதலியவர்களின் திருமணங்கள் பீஷ்மர் பொறுப்பில் நடந்தன. குழந்தைகளில்லாத பிரம்மச்சாரி கடைசி வரைக்கும் தன் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டியிருந்தது.

சத்தியவதியின் முதல் புதல்வன் பட்டாபிஷேகம் செய்துகொண்டான். ஆனால் அவன் சீக்கிரமாகவே ஒரு சண்டையில் இறந்துவிட்டான். இரண்டாவது புதல்வன் விசித்திரவீரியன் மிகச் சிறிய வயதிலேயே அரசனானான். அவனுக்கு உடனடியாக திருமணம் செய்ய வேண்டுமென்று பீஷ்மர் நினைத்தார். காசி நாட்டின் மூன்று ராஜகுமாரிகளின் சுயம்வரத்திற்குச் சென்று பீஷ்மர் மூவரையும் கடத்திக்கொண்டு வந்தார். அம்பை என்கிற மூத்த பெண், தான் சால்வன் என்ற ராஜகுமாரனிடம் மனதைப் பறிகொடுத்ததாகச் சொன்னாள். அவர் அவளை அவனிடம் அனுப்பி வைத்தார்.விசித்திரவீரனுக்குமற்ற இரண்டு பெண்களைத் திருமணம் செய்து வைத்தார்.

அந்தப் பெண்கள் காசியிலிருந்து ஹஸ்தினாபுரத்திற்கு கொண்டு வரப்பட்டவர்கள். அதில் அம்பை சால்வனை மணப்பதற்கு விருப்பம் தெரிவித்தாள். அவனிடம் அனுப்பப்பட்டாள். அவள் காசியிலிருந்த சால்வனைப் போய்ப்பார்க்க சில நாட்கள் பிடித்தன.



இத்தனை நாட்கள் இன்னொருவரின் பொறுப்பில் உள்ள பெண்ணை திருமணம் செய்துகொள்ள முடியாது என்று கூறி சால்வன் அவளைத் திருப்பி அனுப்பிவிட்டான். அம்பை பீஷ்மரிடம் சென்று நீங்கள் என்னைக் கடத்தி வந்ததால், நீங்கள் தான் என்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டாள். பிரமச்சாரியாக இருப்பதாக பிரதிக்ஞை செய்திருப்பதால் பீஷ்மர் மறுத்தார். இறுதியில் அவள் புறக்கணிப்புக்கு ஆளானாள், அவமானமடைந்த, பாதுகாப்பு அற்ற அம்பை தன்னை எரித்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டாள். இந்தத் தருணம் வரை பீஷ்மரின் வாழ்க்கையை குற்றம் சொல்ல முடியாது. யாரும் அவரைச் சபித்தபடி இருக்கவுமில்லை. அவர் தீங்கிழைத்த முதல் பெண் அம்பை தான். பின்னால் இன்னும் அதிகமானவர்கள் இருந்திருக்கிறார்கள்.

விசித்திரவீரியன் குழந்தைப் பேறு இல்லாமல் உடனே இறந்துவிட்டான். சத்தியவதிக்கு தன் மக்களைப் பற்றிய நம்பிக்கை போய்விட்டதோடு நடுக்கத்தையும் உண்டாக்கியது. பீஷ்மரைப்பார்த்து இரக்கத்துடன் அவருடைய பிரதிக்ஞையைக் கைவிடும்படிக் கேட்டுக் கொண்டாள். அரசை ஏற்றுக்கொண்டு பரம்பரையைத் தொடர்ந்து ஏற்படுத்துமாறு வேண்டிக் கொண்டாள். அது முடியாவிட்டால், அவருடைய சகோதரன் மனைவிகளின் மூலமாவது குழந்தைகளை உண்டாக்கும்படி கேட்டுக் கொண்டாள். பீஷ்மர் மறுத்து விட்டார். ஒரே வழிதான் இனி உண்டு. வியாசன் என்ற பெயரில் சத்தியவதிக்கு ஒரு புதல்வன் உண்டு.

சந்தனுவைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன் ஒரு பிராமணன் மூலம் அவளுக்குப் பிறந்தவன். இவன் விசித்திவீரியனுக்கு ஒன்றுவிட்ட சகோதரனாக இருப்பதோடல்லாமல், அவனுடைய மனைவிகளுக்கு மைத்துனனாகவும் உள்ளான். பீஷ்மரின் ஒப்புதலுடன்,இறந்த அரசன் பொருட்டு வாரிசு உண்டாக்குவதற்கு அழைக்கலாமென்று சத்தியவதி முடிவு செய்தாள். அவள் மூத்த மருமகளிடம் சென்று சொன்னாள். பெண்ணே, இன்று இரவு உன் மைத்துனனுக்காகக்காத்திரு. புரியாத இந்த வார்த்தையைக் கேட்டு, அந்தப் பெண் ஆவலுடன் காத்திருந்தாள். வரப் போவது பீஷ்மரா அல்லது வேறு யாராவது குருகுலத்தின் தலைமைப் போர்வீரனா என்று காத்திருந்தாள் .

தலைமுடி சரியாக வாரப்படாத சிகப்பு விழிகளுடன் கூடிய ஒரு கறுப்பு மனிதன் திடீரென்று அவளை நெருங்கினான். அவள் மயங்கி விழுந்துவிட்டாள். அவர்களுடைய உறவில் திருதராஷ்டினன் குருடனாகப் பிறந்தான். சத்தியவதி வியாசனை இரண்டாவது அரசியிடம் அனுப்பினான். இந்தப்பெண் வியாசனின் கொடூரமான உருவத்தைப் பார்த்து வெளிறிப் போன தோற்றத்தில் பயத்துடன் இருந்தாள். அவளுக்கு சோகை பிடித்த தோற்றத்தில் பாண்டு பிறந்தான். மூன்றாவது முறை வியாசனை அனுப்பப்போவதை அவர்கள் அறிந்தவுடன், அவர்களுக்குக் பதிலாக ஒரு பணிப்பெண்ணை படுப்பதற்காக ஏற்பாடு செய்தார்கள். அந்தப் பெண்ணிற்கு பிறந்த புதல்வன் தான் விதுரன் கண் குருடான திரு-தராஷ்டினனுக்கு பீஷ்மர் பலகாத தூரமுள்ள இடத்திலிருந்து ஒரு

ராஜகுமாரியை மண முடித்தார். அந்தப் பெண் தன் கணவர் குருடன் என்பதைக் கேள்விப்பட்டவுடன், வாழ்நாள் முழுவதும் தன் கண்களைத் துணியால் கட்டிக்கொண்டாள்.பருமனும் இளமையும் இல்லாத குந்தியும், அழகான மாத்திரியும் ஆண்மையற்ற பாண்டுவிற்கு மண முடித்து வைக்கப்பட்டார்கள். பாவம் மாத்திரி, அவள் இளமையாக இருக்கும் போதே, கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறி உயிரைத் துறந்தாள். எப்படியெல்லாம் இந்தப் பெண்கள் துன்பப்பட்டார்கள்! எப்படியெல்லாம் அவர்கள் பீஷ்மரை சபித்திருப்பார்கள்!. அவர் தான் அவர்கள் இழிவிற்கும் காரணம். அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு குருகுலத்தின் முக்கியமான தலைவராக பீஷ்மர் இருந்தார். தன் வீட்டை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தில் இந்த அரசிகளுக்கு இழுக்கையும்அவமானத்தையும் ஏற்படுத்தினார். மக்கள் குந்தி மாத்திரி அல்லது காந்தாரியைப் பற்றி என்னவெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பார்கள்என்று எதுவும் சொல்லவில்லை. காசி தேசத்து ராஜகுமாரிகளுக்கு இழைத்த கொடுமைக்காக பீஷ்மர் சிசுபாலனிடம் அவமானப்பட்டார். யுதிஷ்டிரன் (தரும புத்திரன் என்று குறிப்பிடலாம்.) ஒரு யாகம் நடத்தினான். யாருக்கு முதல் மரியாதை என்பதைக் குறித்து சச்சரவு நடந்தது. எல்லா பெரிய அரசர்களையும் அழைத்தனர். பீஷ்மரின் ஒப்புதல்படி, பாண்டவர்கள் கிருஷ்ணனுக்கு முதல் மரியாதை தரலாமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்யத் தொடங்கியவுடன், சிசுபாலன் எதிர்ப்புத் தெரிவித்தான். ஒரு வெளி நபரை மரியாதை செய்வதற்குப் பதிலாக, பீஷ்மருக்கு மரியாதை செய். அவர் உங்கள் குடும்பத்திற்கே மூத்தவர் இதற்கு பதில் சொல்ல முடியாது. கிருஷ்ணன் கூட இதை எதிர்த்து பதில் சொல்ல முடியாது. ஆனால் பீஷ்மரே எழுந்து எப்படி கிருஷ்ணன் எல்லா விதங்களிலும் இதற்கு தகுதியானவன் என்பதை விவரித்தார்.

சிசுபாலனோ பொறுமை இழந்து ஆத்திரத்துடன் "பீஷ்மரே உமது முழு வாழ்க்கையும்ஷத்திரியகுலத்தை இழிவு படுத்தபயன்பட்டுவிட்டது. அம்பை சால்வனுக்குத்தான் என்று தெரிந்த பின்னும், நீர் அவளை கடத்திக்கொண்டு வந்தீர். உன் சகோதரன் துறவி மனப்பான்மை உடைய அரசன் அவளை மணக்க மறுத்து விட்டான். அதனால் அவள் உம்மை நாடி வந்தாள். ஆனால் நீரோ அவளை ஒதுக்கி விட்டீர். உம் சகோதரன் இறந்த பிறகு உரிமைப்படி அவனுடைய ராணிகள் உம்மைச் சேர்ந்தவர்கள். ஆனால் நீரோ அவர்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரகசியமாக ஒரு பிராமணனை வைத்திருந்தீர். நீர் பதிவிரதன் அல்லன். ஆண்மை இல்லாதவன் இப்போதோ முதல் மரியாதை பெறுவதற்கு உரியவனாக நீர் இருந்தாலும் ஏற்றுக் கொள்ள நீர் மறுக்கிறீர்கள். கிருஷ்ணன் புகழைப் பாடுகிறீர். நல்ல காலமாய் பீஷ்மர் துரியோதனனுக்கும் தருமனுக்கும் மணப்பெண்ணைத் தேடவில்லை.

அந்த தலைமுறையில்அவரால் எந்தப்பெண்ணும்துன்பப்படவில்லை. ஆனால் அரசவையில் மூத்தவராக அவர் வீற்றிருந்தாலும், ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட அகௌரவத்தைத் தடுத்து நிறுத்த அவர் சுட்டு விரலைக் கூட அசைக்கவில்லை. திரௌபதி



திருதராஷ்டிரனுடைய அடிமையின் புதல்வன்.அரசவைக்கு இழுத்துவரப்பட்டபோது, விதுரன்தான் குறுக்கிட்டான். அவன் திருதராஷ்டிரனின் இளைய சகோதரன். அதையும் தவிர அவன் ஒரு புதல்வன். இன்னொரு விதத்தில் பீஷ்மர் இது மாதிரியான ஒரு அவலமான காட்சியைத் தடுத்து நிறுத்த அதிகாரம் பெற்றிருந்தார். ஆனால் அவ்வாறு செய்வதற்கு பதில், அவர் எது தர்மம் எது தர்மமில்லை என்பதைப்பற்றி உரையாடிக கொண்டிருந்தார். பெண்ணைப் பெருமைப்படுத்தும் விதமாக மகாபாரதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. ஆனால் பீஷ்மரைபோல் வேறு யாரும் கடுமையாக இருந்ததில்லை. இந்தக் கொடுமைகளை வேண்டுமென்றே பீஷ்மர் செய்தாரென்று நாம் சொல்லவில்லை. இந்த விஷயத்தில் அவர் சிரத்தை எடுத்துக்கொள்ளாதவராக இருந்தார். குருவம்சம் தொடர வேண்டுமென்ற தீவிரத்தினால் அவர் சிரத்தை எடுத்துக்கொள்ளாமல் இருந்திருக்கலாமா? அவர் தன்னை முழுவதும் தியாகம் செய்துகொண்டவர். தனக்காக அவர் வாழாதவர். இந்தப் பெருமைகளெல்லாம் பெண்கள் விஷயத்தில் மனிதாபிமானமற்று நடந்து கொண்டதை நியாயப்படுத்துமா? தனக்கு சில காரியங்களை செய்துகொள்வதை கடுமையாக கண்டிப்பவர், மற்றவர்களுக்கு அக்காரியங்களை செய்வது சரி என்று ஏற்றுக்கொள்ள முடியுமா? அல்லது மகாபாரதம் குறிப்பாகச் சொல்வது மனித வாழ்க்கை ஒருவருக்காக வாழ்வதாக இருந்தாலும் அல்லது சுயநலமில்லாமல் சில காரியங்களைச் செய்வதாக இருந்தாலும் மற்றவர்களுக்கு துன்பத்தைத்தரத்தான் முடியும் எனலாமா?

சுயநலமில்லாத வாழ்க்கை என்றாலும் சுயம் எங்கோ எதையோ எதிர்பார்த்து இயங்குகிறதா? ஏன் பீஷ்மர் வியாசர் மூலம் குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கு சம்மதித்தார்? மகாபாரதத்தைப் பார்க்கும் போது, தேவையான அளவிற்கு அரசவையில் இளைஞர்கள் இருந்தனர்.

அப்படிப்பட்ட ஒரு மனிதனை குழந்தை பெறுவதற்கு தேர்ந்தெடுத்திருந்தால், குரு சபையில், அவர் முக்கியமானஇடத்தைஅடைந்திருப்பார் பீஷ்மர் தன் அதிகாரத்திற்கு இது குந்தகம் விளைவிக்கும் என்று குழம்பி இருப்பாரா? பீஷ்மரின் ஜாதகத்தில் அவர் அரசராவதற்கு எந்த கிரகமும் கூடி வரவில்லை. ஆனால் நிச்சயமாக அதிக ஆண்டு அதிகாரத்துடன் ஆள நிறைய நட்சத்திரங்கள் கூடியிருந்தன. வியாசரைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், பீஷ்மர் அதிகார பலத்தை தனக்குள் வைத்துக்கொள்ள உதவி செய்திருக்கலாம். அதே சமயத்தில் தன் பிரதிக்ஞைக்கு உண்மையாகவும் இருந்திருக்கலாம். அரசியல் பின்னணியில் அவர் செய்கைகள் நியாயமானதாக இருந்தாலும் மனித தர்மத்தின்படி நிந்திக்கக்கூடியவையே.



***

நன்றி – நிவேதினி

# புதுமைப்பித்தனின் அகல்யை மீள் வாசிப்பின் ஒரு மீள் வாசிப்பு

- ரா.நித்தியானந்தன்

சிறுகதைத் துறையில் அனைத்து சாத்தியங்களையும் சாதித்துக் காட்டியவர் புதுமைபித்தன். காலமாற்றங்களில் இன்னும் கடந்து போகாத இலக்கிய வடிவம் அவருடையது. சிறுகதை உலகில் அவரே ஒரு தொடக்கப்புள்ளி என்று கூறலாம். தமிழில் சிறுகதைகளின் சகல கூறுகளையும், கோட்பாடுகளையும் இவர் பரீட்சித்துள்ளார். அதாவது தமிழின் அறநெறி சார்ந்த, இயல்புவாத, யதார்த்தவாத, தத்துவவிசாரனைகளுடன் கூடிய கற்பனைவாத மிகைக்கற்பனைவாத நவீனவாத பின் நவீனத்துவ, கட்டுடைப்பு என்ற பல கூறுகளை வெவ்வேறு இடங்களில் அவரது சிறுகதை படைப்புகளில் அடையாளம் காணலாம். அவருடைய கதைகளை வாசிக்கும் போது அழகியலுக்கும் கருத்தியலுக்கும் ஏற்ப அவருடைய கதைகள் மிக இணைந்து செல்கின்றன. 'செல்லம்மாள்' போன்ற கதைகள் மீள் வாசிப்புக்கு சாத்தியமாகும். அவர் எழுப்பிய அதே கேள்விகளை ஜெயகாந்தன் எழுப்பினார். பலர் எழுப்பினர். இன்றும் அது எழுப்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. விசாரணைகளை அவர் மீள் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார். அவர் தனது சிறுகதைகள் மூலம் தொடர்ந்து கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தார். அவை கிண்டலும் கேலியுமாக வெளிப்பட்டன. நடைமுறை உலகினை மட்டுமல்ல இதிகாசங்களையும் வரலாற்றையும் பகைபுலமாகக் கொண்டு சிறுகதைகளைப் படைத்துள்ளார். புதுமைப்பித்தனின் கதைகளில் ஒட்டுமொத்த சாரமே அவர் கொண்டிருந்த முரண்பாடே. முரண்பாடே அவரின் பகைபுலம். முரண்பாடுகளைக் கொண்டிருக்கிறவன் தான் மாற்றுக் கருத்துக்களை முன் வைக்கின்றான். நான் இங்கு ஆராய விரும்புவது அகலிகை என்ற புதுமைப்பித்தனின் மிகவும் சுவாரஷ்யமான நனவிழி மனதை படம் பிடித்துக்காட்டும் சிறுகதையைப் பற்றியது. இக்கதைப்பற்றி பலர் பேசியிருக்கலாம். ஆனால் மீண்டும் மீண்டும் பேசுவதற்கு இக்கதை இடம் தந்து கொண்டிருக்கின்றது.அதுதான் புதுமைப்பித்தனின் கதைகளில் இருக்கும் மிகப் பெரிய பிடிமானம் .மனித வாழ்வில் மிகப் பெரிய பிரச்சினைக்குரிய விடயம் காமம். காமத்தின் வெளிப்பாடே கலாச்சார வடிவமாக காதல் என்று வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்திய வேத சாஸ்திரங்கள் காமத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கின்றன. சமணமும் பௌத்தமும் பெண்ணே காமத்தின் ஊற்று என்கின்றன. நவீன சிந்தனைவாதிகள் பெண் என்று காமத்திலிருந்து விடுதலை பெறுகிறாளோ அன்றே அவள் சமூகத்திலிருந்து விடுதலை பெறுகிறாள் என்கின்றனர். காமமே பெண்ணை அடிமைக் கொள்ளவும் பாலியல் வன்முறைக்குத் தூண்டவும் காரணமாகிறது.

அகலிகை என்ற கதையை புதுமை ப்பித்தன் ஒரு மென் நீரோட்டம் போல் எழுதி ஒரு சிவப்பு முற்றுப்புள்ளியில் முடிக்கின்றார். இராமாயணத்தில் வருகின்ற அகலியை என்பவளை விட



புதுமைப்பித்தனின் அகலிகை காமம் நிறைந்தவள். அவளின் கணவனோ அடக்கமுள்ளவர். அண்டசராசரங்களின் தரிசனத்தைக் காண காட்டுக்கு வந்தவர். எனவே புதுமைப்பித்தனின் அகலிகை என்ற கதை 'செக்ஸ்' தொடர்பான புரிதல் கதைச் சுருக்கம் இவ்வளவுதான். நட்ட நடு காட்டில் ஆச்சிரமம். அருகில் சிந்து நதி. அது ஒரு மாலை நேரம். அகலிகை காமத்துடன் கௌதரைப் பார்த்து நீராட அழைக்கிறாள். நீரில் கௌதமருடன் சரசமாட அவளுக்கு ஆசை. ஆனால் அவர் கிரந்தையை முடித்துவிட்டு வருவதாகக் கூறுகின்றார். அவள் பாலியல் ஆசைகளை சுமந்து கொண்டு சிந்துவை நோக்கி பயணிக்கின்றாள். அவர் வருவதாகத் தெரியவில்லை .

எனவே, அந்த பெண் தனது முழு ஆடைகளையும் களைந்து விட்டு நீரில் குளிக்கின்றாள். அங்கே தற்செயலாகத்தான் இந்திரன் வருகின்றான். அவளின் இயற்கை அழகைக் கண்டு கல்லாய் சமைகின்றான். அவனின் மிருகவுணர்ச்சி மேலிடுகின்றது. அவளை அடைந்துவிட வேண்டும் என்ற ஆவல் மேலிடுகின்றது. ஆனால் இந்திரன் தன்னைப் பார்த்துவிட்டான் அவன் பார்த்துவிட்டான் என்பதை கண்ட அகலிகை அவன்மீது கோபப் பார்வை பார்க்கின்றாள். சேலையை எடுத்து அணிந்து கொண்டு ஆச்சிரமத்தை நோக்கி ஓடுகினறாள். ஆனால் அவள் இந்திரன் தன்னை கண்டு விட்டதை கௌதமரிடம் கூறிய போது " நீ குளிக்கிறாய் என்பதற்காக எல்லோரும்கண்ணைக் கட்டிக் கொண்டா இருப்பார்கள்" என்கின்றார். அன்று முழுவதும் கனவும் ஆசைகளும் காமமும் அவளை ஆக்கிரமிக்கின்றன. விடியற்காலையில் ஒருகன்னிப்பெண்ணுக்கு இருக்கின்ற .இயல்பான கனவுகளுடன் அவள் அரைத் தூக்கத்தில் கிடக்கின்றாள். எனவே கௌதமரை அடைவதை போன்ற கனவினைக் காண்கின்றாள். ஆனால் கௌதமர் முனிவர், தன்னுள் வெளிப்பட வேண்டிய ஆசைகளின் சலனங்களில் குறியீடாக அவர் இல்லை. அவர் காணத்துடிக்கும் சராசரங்களின் அழகு இப்படி இருக்க இந்திரன் அவளை அடைய சதி செய்கின்றான்.

முன் ஜாமத்தில் கோழியைப் போல் கூவி கௌதமரை வீட்டை விட்டு கடத்துகின்றான். அவளுடைய காமமும் அவனின் மிருக வெறியும் இருவரையும் ஒன்றிணையச் செய்கின்றன.

அதன்பின் தான் அவன் இந்திரன் என்பதை அவள் அறிகின்றாள். துடிக்கின்றாள் என்பது கதையில்ஒட்ட வைக்கப்படுகின்றது.

சதியை அறிந்து கௌதமர் குடிலுக்குள் வருமுன் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

கணவனுக்குத் தோன்றும் இயல்பான கோபம் அவருக்குத் தோன்றவில்லை இந்திரனை அவர் அப்படி ஒன்றும் கடுமையாக கடியவில்லை.

அகலிகையைப் பார்த்து அவர் கேட்கும் கேள்வி அந்த சமயத்தில் " உனது உடலுமா உணர்ச்சியற்று கல்லாய் சமைந்துவிட்டது" என்பதுதான்.

இக்கதையை வாசிக்கும் ஒரு சராசரி வாசகனுக்கு தன் மனைவியை சோரம் போக விட்டு விட்டு வேடிக்கைப் பார்க்கும் சோப்பிலாங்கி கணவன் தொடர்பாக அசூசை மனதில் தோன்றும்.

முற்றிலும் பௌதிக மானிட பொதியை புலமைப்பித்தன் இக்கதையில் காட்டுகின்றார். மிகச் சிறந்த குறியீடு மூலம் அவர் சூழலை மனித உணர்வுகளுடன் பொருதுகின்றார். அங்குள்ள

மரமும் கொடியும் மனிதனின் வெற்றிகளை காணாதவை. அவை இன்னும் மரபு சார்ந்தவை. சிந்து கன்னிப்பருவம் நிறைந்தது. அது அகலிகையின் குறியீடு.

இவர் உலகின் எல்லையைக் காண காட்டுக்கு வந்தவர். 'புத்தர் தன் மனைவியை விட்டு காட்டுக்கு வந்தது போல' இவர் தன் இள மனைவியுடன் வந்துவிட்டார்.

அவர் தனி இடத்தில் அவருடன் ஆசையைத் தீர்க்க தவமிருக்கிறார். அவளோ தன் உடல் ஆசையை தீர்க்க தவிக்கிறாள்.எனவே தான் கௌதமரின் திரண்ட மார்பும் ஒடுங்கிய வயிறும் ஒளிவிடும் கண்களும் அவளின் காதலை தூண்டுகின்றன. அகலிகை காமத்துடன் அவரை அப்படியே சற்று நேரம் அணைத்துவிட்டு நதிக்கு போகின்றார்.

தன்னுள் வெளிப்படும் சலனங்களின் குறியீடாக அவள் இல்லை. அவர் காணத் துடிக்கும் சராசரங்களின் அழகு அவளிடம் இல்லை. அவள் உடையைத் துவைப்பதும் குடத்தை தேய்ப்பதும் எல்லாமே வேகமாக நடக்கின்றன. அவர் ஆற்றங்கரைக்கு வரும்வரை அவள் காத்திருக்கவில்லை. இந்திரன் அவளின் அசூசை இல்லாத உடலை கண்டு கல்லாய் சமைந்துவிட்டான். உண்மையில் அகலிகை என்ன செய் திருக்க வேண்டும். தனது உடலை மறைத்திருக்க வேண்டும். பதட்ட மடை ந்திருக்க வேண்டும். அப்படி ஏதும் நடக்க வில்லை. ஆடையைக் களைந்த அவள் அவனைக் கோபப் பார்வை பார்க்கின்றாள். அவனின் மிருக உணர்ச் சியைப் புரிந்து கொள்கிறாள். சரி அந்தஇரவில் கௌதமரைத் தவிர வேறு ஒரு நொடிப் பொழுதில் கூட தன் கணவனின் உடலை அகலிகை உணர்ந்து கொள்ள வில்லையா?

'அவள் மேல் துரும்பை எடுத்து வீசினால் கூட போதும் அவளின் காதலின் உயர்வை அவர் அறிந்திருந்திருந்தார் என்பது இங்கு ஒரு கேள்விக்குறியாகி விட்டது'. கற்பு என்றும் பத்தினி என்றும் அவர் மீண்டும் மீண்டும் எண்ணியது இங்கு பொய்மையாகி விட்டது.

ஆனால் இங்கு அறத்துக்கும் லௌகீகத்துக்கும் இடையில் நடந்த போரில் அறம் லௌகீகத்துக்கு முன் தோற்றுப் போய் விட்டது. இதுதான் புதுமைப்பித்தனின் வாதம்.

"சாதாரண பெண்ணின் லௌகீக தேவையை மானசீகத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத அறம் இப்படித்தான் அவளைப் போல் தோற்று நிற்கும்" என்று மறைமுகமாக கிண்டல் செய்வதுடன் தத்துவ விசாரனையை மேற்கொள்கின்றார்.

தத்துவார்த்தமாகப் பார்ப்பதானால் இங்கு கட்டுடைப்பு நடக்கிறது. லௌகீகத்துக்கு முன் அறம் குற்றவாளியாக நிற்கிறது. அந்த குற்றம் தான் அவரை சாப விமோசனம் முழுவதும் அலைக்களிக்கிறது முப்பதுகளில் புதுமைப்பித்தனால் எப்படி எழுதியிருக்க முடியும் என்பது ஆச்சரியமாகவுள்ளது. மரபுக் கட்டு களை இவ்வளவு வேகமாக இப்படி போட்டு உடைத்தாரே என்பது ஆச்சரியம் தான் .

இக்கதையில் மீமனிதனின் ஆற்றல் அல்லது நனவிழி மனதின் ஆற்றல் வெளிப்படுகிறது. ஆசையின் உச்ச த்தில் அது நிறைவேறாத போது மீமனிதன் ஆற்றல் வெளிப்படுகி ன்றதென்ற ' சிக்மன் பிரைட்டின்' வாதம் இங்கு நிதர்சனமாகின்றது. முரணுணர்வே பெரும்பாலான



சிறுகதைகளுக்கு அடிப்படையாகின்றது. தன்னுடைய உணர்வானது மற்ற வர்களின் உணர்வுகளுடன் அடிப்படை யில் ஒத்துபோகாததை இது குறிக்கிறது. இதுவே தர்க்க வாதமாக அமைகிறது. .இன்னின்ன சூழ்நிலைகளில் இன்னின்ன உணர்வுகள் இவ்வாறு எழும்பக் கூடியவை என்பது புதுமைப்பித்தனின் கதை. இங்கு கௌதமரின் அற உணர்வுகள் அகலிகையின் லௌகீக த்துடன் ஒத்து போகவில்லை. நனவிளி மனதின்செயற்பாடு இக்கதையின்அடிப்ப டையாக உள்ளது. சேக்ஸ்பியரின் ' ஹம்லெட்' என்ற நாடகத்தின் ஹம்லெட்டின் தந்தையை அவனுடைய சிற்றப்பன் கொன்று விடுகிறான். ஹம்லெட்டின் தாய் சிற்றப்பனைக் கொன்று விடும்படி இறைஞ்சியும் ஹம்லெட் அதற்கு தயங்குகிறான். நனவிழி மனம் அதற்கு ஒப்பவில்லை. ஏனெனில் தந்தை மீது ஹம்லெட்டுக்கு ஏற்கனவே இருந்த கோபம் முரண்பாடு காரணமாக நனவிழி மனம் நனவுடை- யோடு மோதி இப்படி ஒரு முடிவுக்கு வருகிறது.

இன்னும் ஒரு கதை. கிரேக்க புராண கதை நாயகன் தான் ஒடிபஸ். அவன் தந்தை ஒரு அரசன். அவன் தன் தந்தை என்று அறியாமலேயே தந்தையை ஒடிபஸ் கொன்று விடுகிறான். தான் மன்னனாக வேண்டும் என்பதற்காக அரசனின் மனைவியை திருமணம் முடிக்கிறான். பின்னர் அவள் தான் தன் தாய் என அறிந்ததும் தற்கொலை செய்து கொள்கிறான். இது முரணுறு நனவிலி

மனதின் வெளிப்பாடு. இது போன்றதொரு கதை இந்துதுவத்தின் புராண கதைகளில் உள்ளது. பரசு ராமனின் தாய் தான் பானையை வனைந்து கொண்டிருக்கும் போது ஆகாயத்தில் சஞ்சரித்த இந்திரனைப் பார்த்து ஒரு கணம் லயிக்கின்றாள். அந்த லயிப்பு அவளுக்கு மரணமாக வந்தமைகின்றது. தந்தையின் கட்டளைப்படி பரசுராமன் அவளைக் கொன்றுவிடுகின்றான். எனவே நனவிழி மனதின் தற்செயலான முரணுணர்வு பெண்ணுக்கு சாபமா கின்றது. அந்த சாபம் பெண்ணுக் கென்று விதிக்கப்பட்டது. அகலிகைக்கு அது நடந்தது. அகலிகையின் செயலுக்குக் காரணமாக இருந்த கௌதமருக்கு எந்த தண்டனையும் இல்லை.

மேற்குறித்த இரண்டு கதைகளி லும் இந்திரனுக்கு அப்படியொன்றும் தண்டனை கிடைத்துவிடவுமில்லை. இதைத்தான் புதுமைப்பித்தன் தனது கதையில் போட்டுடைக்கிறார்.

செக்ஸ் புரிதல் இல்லாத வரை எல்லா உணர்வுகளும் இப்படித்தான் உடைந்து போகின்றன. ஆனால் அதற்கு புனிதத்துவம் கொடுத்து எமது மரபுகள் அதனை மூடி மறைக்கின்றன.

எமது அன்றாட வாழ்வில் நாம் காண்கின்ற காட்சிதான் இங்கு இப்படி புராண கதைகளில் பரிணமிக்கிறது. ***

## காணாமல் போகும் நாம்

**வா**னம்
உயர்ந்து கொண்டே
போகிறது.
இந்த பூமி
சின்னதாகி.. சின்னதாகி..
சிறிது... சிறிதாய்...
புள்ளியாய்
கண்ணுக்குத் தெரியாமல்
மறைந்து போகிறது
நம்,
உறவுகள் போல.

**ஆர்.ருஷாந்த பிரியா**

# வளி அடைப்பு

## செ. சுதர்சன்

அமத்தியடைத்துப் பொதியிடக்
காற்றுப் புழுங்குமொரு காலையில்
வீட்டுப்பாயுடன்
தெருவோரத் திண்ணையுமிழந்தோம்.
நாசியிருப்பை மனிதக்குறியென
அவர்கள் காணவே
வளியற்று வெளிதிணறி
முகில் கருகி செத்ததாய்
குழந்தைகள் பேசின.



வளி பற்றியேங்கிக் கொக்கரிக்க
ஒளிவந்து ஏமாத்தியதால்
நிலத்தைக் கீறி நாயென நிக்கிறது
குப்பை கிழறிக் கொண்டைச் சேவல்.
பெரிதெனினும் வேண்டோமொரு
வளியற்ற வானம்.
காற்றை வரையுமோர் ஓவியனின்
சுந்தரப்பண்ணிலும்
சவரக் கத்தியின் பளபளப்பு
ஏறும்வரை....
உணரு நண்பா
பொதிசெய்யப்பட்ட காற்று
எதையும் எழுதிச் செல்வதில்லை
ஆயினும்
உயிர்த்தலுக்கும் வாழ்தலுக்குமான
அதன் போரும்
மூச்சடங்கித் திணறலும்
எனக்குள் வலித்துகொண்டிருப்பதை..





# மத அடிப்படைவாதிகளால் நலிவுற்று வரும் இஸ்லாமிய சமூகம்

– ஸர்மிலா செய்யித்

விஸ்வரூபம் திரைப்படத்தைத் தடை செய்யக்கோரும் இஸ்லாமியர்களின் கோரிக்கையின் காரணத்தை முழுமையாக விளங்காத சிங்கள நண்பர் ஒருவர் தற்செயலாக அது பற்றிக் கேட்டார். ' இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாகச சித்தரிக்கும் காட்சிகள் படத்தில் இடம்பெற்றுள்ளதால், என்றேன். 'சொல்றேன் என்று தப்பா நினைக்காதே. இவர்கள் இப்போது நடந்து கொள்வது மட்டும் ஜனநாயகமா?' என்றார்.

இந்தக் கேள்வி யாரோ ஒரு சிங்களவரினுடையதுமட்டுமல்ல.உலகம முழுவதும் வாழுகின்ற இஸ்லாமியர் அல்லாத அனைவரினுடையதும தான். சில இஸ்லாமியர்களினுடையதாயும் இருக்கலாம். விஸ்வரூபம் திரைப்படத்தின் உப்பு, காரம் தெரியாமலே இலங்கையில் அதைதடை செய்தாயிற்று. துமிழகத்தில் அனைத்திந்திய ஜமாஅத் தடை செய்யக்கோரியதன் எதிரொலியாக இலங்கையிலும் அது செய்யப்பட்டது. தடையுத்தரவை நீக்குவதா வேணடாமா? என ஆலோசிப்பதற்காக உலமாக்கள் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்களுக்கு அத்திரைப்படம் இலங்கைத் திரைப் படக் கூட்டுத்தாபனத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. உலமாக்கள் திரைப்படம் பார்க்க முடியுமா? என்பது மற்றொரு கேள்வி விமர்சனத்திற்குரியது.

நாம் எத்தனையோ சினிமாக்களைப் பார்த்திருக்கிறோம். மிகக் குரூரமானதும் நெஞ்சை நெருக்குவதுமான சமூகக் கொடுமைகளையும் பார்த்து ரசித்து விட்டு எதுவுமே நடவாதது போல



திரையரங்கிலிருந்து வெளியேறி விடுகின்றோம். திரைப்படத்திற்கு ஏனைய சமயங்களைக் கேள்விக்குட்படுத்துகின்றகுறிப்பாக இந்துசமய வரலாற்றுப் பாரம்பரியக் கதைகளையும் பாத்திரங்ககளையும் விமர்சிக்கின்ற பாரம்பரியங்களை உடைத்தெறிகின்ற சினிமாக்களும் வந்துதான் இருக்கின்றன. அப்போதெல்லாம் மிக ஆரோக்கியமான விமர்சனங்கள், கருத்தியல்களால் சமூ கல்வியலாளர்களும் சமயத்தவர்களும் அவற்றை எதிர்கொண்டிருக்கின்றனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் ஆரோக்கியமான விவாதங்களுக்கும், கருத்தியல் வெளிக்கு முன் வரவும் தயாரில்லாதவர்கள். சினிமாவில் அப்படி சித்திரிப்பதால் ஒன்றும் கிழிந்துவிடப் போவதில்லை என்று தம் வேலையைப் பார்க்கத் திராணியற்றவர்கள் ஒரு சினிமா வந்து தான் சமுதாய மாற்றம் வந்துவிடப் போகின்றது என்றால், சினிமா பார்த்துத்தான் சமூகம் சீரழிந்துவிடப்போகிறதென்றால் இதுவ்ரை வெளிவந்த இலட்சக்கணக்கான சினிமாக்களால் உலகம் மகத்தான அளவில் சீரடைந்திருக்க வேண்டும். அல்லது சீரமைக்கவே ஒண்ணாதளவில் சின்னாபின்னமாகியிருக்க வேண்டும். பத்தில் ஒன்றாகச் சும்மா வரவிருந்த விஸ்ரூபம் திரைப்படத்திற்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகள் உலகத்தரத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றனர். அப்படி என்னதான் அதில் இருக்கின்றதென்று பார்ப்பபதற்கு எல்லோரையும் துாண்டச் செய்துள்ளது. தடையிட்டால் என்னஎங்காவது'டவுன்லோட்'செய்யலாமா? எவ்வளவு தொகையை

கொடுத்தாவது 'பிளக்கில்' வாங்கலாமா என்று அழைந்து திரிவதில் எல்லாரையும் பைத்தியம் பிடிக்கச் செய்திருக்கின்றனர் இஸ்லாமிய அடிப்படைவாதிகள்.

மேலைத்தேய நாடுகள் தங்களைத் தீவிரவாதிகளாகக் காண்பிக்கச் சதிகள் செய்வதாக இஸ்லாமிய அடிப்படை வாதிகள் சுயப் பிரச்சாரம் செய்து வருகின்ற சூழலில் சமீபத்தில் ' ரிஸானா றபீக்' என்ற சிறுமிக்கு சவூதிஅரேபியாவில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை உலகத்தின் மனசாட்சிக்குப் பேரிடியாக அமைந்திருந்தது.

1999 ஆம் ஆண்டு துருக்கிய அரசு குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலைவரான அப்துல்லா ஒச்சலானுக்கு மரணதண்டனை விதித்தது. மரண தண்டனை, மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள் நீண்டகாலமாக உலகெங்கிலும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் குர்திஸ்விடுதலை இயக்கத்தின் தலைவர்அப்துல்லா ஒச்சலானுக்கு மரணதண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னரே. அது குறித்த விவாதங்கள் உலகெங்கிலும் முனைப்புப் பெற்றன. ஐரோப்பிய யூனியனின் நெருக்குதல் காரணமாக 2001ஆம் ஆண்டு துருக்கிய அரசாங்கம் உத்தியோகப்பூர்வமாக மரண தண்டனையை முற்றிலும் கைவிட்டது.

சவூதிஅரேபியா,ஆப்கானிஸ்தான் குவைத், பர்மா போன்ற இஸ்லாமிய நாடுகளில் மரண தண்டனை மாற்ற முடியாத சட்டமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இது மிகப் பலமான மத அடிப்படையே இச்சட்டங்கள் நடைமுறையில் இருப்பதற்கான காரணங்களாகின்றன. மரண தண்டனைக்கு எதிரான இயக்கமும் மனித உரிமைகள் சார்ந்த அக்கறைகளும், குரல்களும் முக்கியத்துவம்பெற்றுள்ள சமகாலத்தில் ரிஸானா றபீக் சிறுமிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை பல தளங்களில் விவாதிக்கப்பட வேண்டியதும்,மனித உரிமைகளுக்கான அறைகூவல்களுக்கு பலமான பின்னடைவு என்பதும் ஏற்க வேண்டியவையே.

ரிஸானா றபீக்கிற்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை குறித்த கவலைகளை, அந்தச்செய்தி அளித்த ஏமாற்றங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாத சூழலை சமீப காலங்களில் காணக் கூடியதாக இருந்தது. இஸ்லாமிய ' ஷரீஆ' சரியா என்ற விவாதங்கள் எழுந்தன. இது மிக இயல்பானது, ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்புக்கு விவாதங்கள் கருத்தியல்கள்மிகஇன்றியமையாததாகின்றது. இதன்போதும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பொங்கி எழுந்தனர். றிஸானா றபீக்கிற்கு அளிக்கப்பட்ட தண்டனை சரியோ, பிழையோ யாரும் அது பற்றி மூச்சுவிடக்கூடாது. அது இஸ்லாமிய ஷரிஆ அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களது வாதமாக இருந்தது.


அது இஸ்லாமிய ஷரீஆவை அப்படியே பிசகாமல் பின்பற்றுவதாக கூப்பாடு போடுகின்றவர்கள் ஈச்சம் பாயில் படுத்து ஒட்டகத்தில் பயணிக்கலாமே!

இஸ்லாத்திற்கு எதிரான கருத்தொன்று எழும் போது அதனை எதிர்கொள்ளத் தெரியாதவர்களாக, எதிர்கொள்வதற்கான பக்குவமற்றவர்களாகவே இஸ்லாமிய அடிப்படைவாதிகள் தங்களை நிரூபித்து வருகின்றனர். இலங்கையில் மட்டுமல்ல, ஆசிய நாடுகளில் வாழும் முஸ்லிம் இயக்கத்தவர்கள் எதிர்த்தலில் ஒரே பொதுக்குறியைக் கொண்டவர்கள் தான். தமிழகத்தில் நக்கீரன் இதழில் றிஸானாவுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை மிகக் கொடுமையானது என்று எழுதியதற்காக மனுஷ புத்திரனுக்கு மிருகபுததிரன் பட்டமளித்து அங்குள்ள இஸ்லாமிய அடிப்படை வாதிகளால் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டன. தமிழக அரசியலில் முன்னிலையில் இருக்கும் கருணாநிதி, றிஸானாவின் மரண தண்டனையைக் கண்டித்தார் என்பதற்காக அவருக்கும் ஏச்சுப் பேச்சு, எதிர் கருத்தாளரை எப்படி எதிர்கொள்வதென்பதும் தனிமனிதனுக்கு இருக்கத்தக்க கருத்துச் சுதந்திரத்தையும் சமூகத்தில் தனிமனிதர்களுடைய வகிபாகத்தையும் இன்றைய இஸ்லாமிய அடிப்படை வாதிகள் மறுக்கின்றதையுமே இவை காட்டுகின்றன. மிகத்தொன்மையான வரலாற்றைக் கொண்ட இஸ்லாமியர்கள் ஏதோ நேற்றுத் தோன்றிய மதம் என்பது போலவும் தப்பபிப்பிராயங்கள் ஏற்படுத்தச் சதிகள் நடக்கின்றன என்பதாகவும் வரிந்து கொண்டு செயற்படுவது கேலிக்கூத்தாகி ஏனைய சமூகத்தவர்கள் முகம் சுளிக்கின்ற குரோதத்தை ஏற்படுத்துகின்ற நிலைக்கு வந்துள்ளது.


முரண்பாடுகளை இல்லாதொழிப்பதே ஜனநாயகத்தின் இலட்சியம், இஸ்லாம் என்பதே சமாதான வழி மார்க்கம். இஸ்லாத்தின் முன்மாதிரி முஹம்மது மன்னிப்பை நல்லிணக்கத்திற்கான ஆயுதமாகப் பயன்படுத்தியவர். இன்றைய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இஸ்லாம் என்றால் எப்படி இருக்கும் என்று கேட்கின்ற நிலைக் வந்து விட்டார்கள். ஏனைய சமூகங்களைப் பற்றிய எந்த அக்கறையும் அவர்களுக்கிருப்தாகத் தெரியவில்லை. ஒரு மூடிய சமூகமாக தொட்டாற் சிணுங்கி சமூகமாக, தொட்டதெற்கெல்லாம் கண்டனம், ஆர்பாட்டம்,போஸ்டர்என கிளிர்த்தெழுகின்ற சமூகமாக நலிந்த சமூகமாக இஸ்லாமிய சமூகத்தை அடிப்படைவாதிகள் மாற்றி வருகின்றனர்.

பல நூறு பேரை கொத்து, கொத்தாக் கொன்று, கிராமங்கள் பலவற்றை அழித்து அட்டூழியம் புரிந்த சுமாமா என்ற அராஜகனை முஹம்மது மன்னித்ததாக இஸ்லாமிய வரலாறு சொல்கிறது. சுமாமாவைத் துன்புறுத்தவோ குறைந்தபட்சம் திட்டவோ செய்யவில்லை என ' ஸஹீஹல்புகாரி' என்ற ஹதீஸ் கிரந்தம் கூறுகிறது. தன் இளைய தந்தையின் ஈரலைச் சப்பித் துப்பிய ஹிந்தாவையே மக்கா வெற்றியின் போது முஹம்மது மன்னித்தார் என்று இன்னொரு ஹதீஸ் கூறுகிறது. அக்கிரமங்களில் ஈடுபட்டவர்களை முஹம்மது மன்னித்தாரென்றால் றிஸானா றபீக் போன்ற அறியாச் சிறுமிகளை மன்னிக்க முடியாதா என்ன? ரிஸானா 2005ஆம் ஆண்டு சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாகச் சென்ற சிறுமி. நான்கு மாதக் குழந்தையைக் கொலை செய்தாள் என்று 2007ஆம்ஆண்டு சவூதி அரேபிய அரசாங்கம் தீர்ப்பு வழங்கியது. 2013 ஜனவரி 09ஆந் திகதி சிறுமி றிஸானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.சவூதிஅரேபியாவினுடையது மத அடிப்படைச் சட்டம் எனில், முஹம்மதின் முன்மாதிரியை கைவிட்டதை யாரும் விமர்சிக்கக்கூடாது என்கிறார்களா அப்படைவாதிகள்? மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் றிஸானா றபீக் 5 ஆண்டுகள் சிறையில் இருந்தாள். அவளை

விடுவிப்பதற்கு இஸ்லாமிய சமூகம் முயற்சி எடுத்ததா? மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்றுள்ள இலட்சக்கணக்கான முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எப்போதாவது அக்கறைப்பட்டுள்ளார்களா? பணிப்பெண்கள் என்ற பெயரில் அரபு நாடுகளில் பாலியல் அடிமைகளாகச் சிக்கிக் கிடக்கும் இலட்சக்கணக்கான முஸ்லிம் பெண்களை மீட்கவும், மறுவாழ்வளிக்கவும், அடிப்படைவாதிகளிடமுள்ள தீர்வுதான் என்ன? இஸ் லாமிய சமூகத்துக்குள்ளே புரையோடிக் கிடக்கின்ற சமூகக் கொடுமைகளுக்காக அக்கறைப்படாத அடிப்படைவாதிகள் யாராவது கருத்துக் கூறும்போது, எழுதும்போது, சினிமாவில் சித்தரிக்கும் போது மட்டும் இது இஸ்லாத்திற்கு எதிரானது என்று கச்சை கட்டிக் கொண்டு வந்துவிடுவது ஏன்? இத்தகைய முரண்பாடான சூழ்நிலைகளினிடையே முஸ்லிம்கள் தீவிரவாதிகள் போன்று செயற்படுகிறார்கள் என்று மேலைத்தேய நாடுகள் என்ன உள் நாட்டுக்குள்ளேயே குரல்கள் எழுப்புவதில் ஆச்சரியப்படுவதற் கில்லையே.



பல்லின சமூகத்திற்குள் வாழுகிறோம் என்பதையே பல தருணங்களில் மறந்துவிடுவதும், இன்றைய செயற்பாடுகள் எதிர்கால சந்ததிகளை எவ்வளவு தூரம் பாதிக்கக்கூடும் என்பதை குறித்ததுமான விரிவான நோக்குகளும் சிந்தனைகளும் இல்லாமலேயே இன்றைய இஸ்லாமிய அடிப்படைவாதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனால் மேலும் மேலும் பாதிக்கப்படுவது இஸ்லாமிய சமூகம் என்பதே கவலைக்குரிய விடயமாகும்.




மனமோகி
**சந்தா**
மேற்படி இதழின்
தனிப்பிரதி ரூ. 100/-
வருடாந்த சந்தா ரூ 460/-
( தபால் செலவு உட்பட)
**விளம்பரம்**
பின்னட்டையிலும்
உட்புற அட்டையிலும்
விரும்புவோர்
தொலைபேசியூடாக
தொடர்பு கொள்ளவும்
**ஆசிரியர், மனமோகி**
**334.E பலகொல்ல**
**கெங்கல்ல**
**(இலங்கை)**






# கண்டியிலிருந்து ஜானு பிருத்வியின் ஒரு குறும்படம்

- ஆர். பரமேஸ்வரன்

ஜானு பிருத்வி என்ற பெயரைப் பார்த்தால் ஒரு பெரிய-திரைப்பட இயக்குநரின் பெயரைக் கேட்பது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்படலாம். இவர் ஓர் 20பது வயது இளைஞர். பரீட்சார்த்தமாக குருந்திரைப்பட முயற்சியில் இறங்கியிருக்கிறார். இவர் ஒரு பெரிய-திரைப்பட இயக்குநராக வரக்கூடியவர் என்ற தீர்க்க தரிசனத்துடன் இவரது தந்தை இந்த பெயரை வைத்திருப்பார் என்று யாராவது சொன்னால் அதில் தவறு இருப்பதாக சொல்லமுடியாது. பிருத்வியின் இரண்டு குரும் படங்களான 'மனசு', 'வியூகம்' இரண்டும் மனமோகி என்ற சஞ்சிகை வெளியீட்டு விழா(30. 12. 2012) அன்று கண்டி இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் பார்வையாளர்களுக்காக திரையிடப்பட்டது. இக்குறும்படங்கள் தொடர்பாக கருத்துரையொன்றை வழங்குமாறு நான் கேட்கப்பட்டேன். திரைப்படங்களை அதிகமாக பார்த்து ரசிப்பவன் என்ற ரீதியில் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் என்னை கருத்துரை வழங்குமாறு கேட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். அக்கருத்துக்களை இங்கு உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைப்பதுடன், அக்குறும்படங்கள் தொடர்பாக சில மேலதிகமான கருத்து க்களையும் இங்கு சொல்லலாம்.

'மனசு' என்ற குறும்படம் மாணவர் ஒருவர் பாடசாலையை விட்டு மெதுமெதுவாக வீடு திரும்பும் பாதையில் அருகிலுள்ள பற்றையொன்றில் ஒரு மர்ம உருவம் நிற்பதைப் போன்று பார்க்கிறார். இதன் காரணமாக பயபீதிக்கு உள்ளாகும் இவர் தனது வீட்டில் உருவங்கள் நடமாடுவது போலவும், தோன்றி மறைவது போலவுமான காட்சிகளைக் காண்கின்றார்.

வகுப்பில் இவர் பாதிக்கப்பட்ட மன நிலையில் இருப்பதை கண்ட ஆசிரியர் விடயத்தைக் கேட்டறிந்து ' கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்' என மாணவனுக்கு அறிவுரைக் கூறுகின்றார். மாணவன் தெளிவடைந்து பாதையோரத்தில் உள்ள பற்றைக்குள் இறங்கிச் சென்று பார்க்கும்போது மனித உருவம்போன்று தோற்றமளிக்கும் வகையில் துணியொன்று செடியொன்றின் மீது கிடப்பதைக் கண்டு தெளிவடைகின்றார். ஆழமான கருத்தொன்றை அழகாக சொல்லிச் செல்வதற்காக இயக்குநரைப் பாராட்டவேண்டும். குறிப்பாக வீட்டில் உருவங்கள் சடுதியாக தோன்றி மறையும் விதம் பாராட்டுதற்குறியது. மாணவராக எஸ். சுகிர்தரதயால் நடித்துள்ளார். இவரது நடிப்புக்கு புதியவர் என்ற வகையில்



போதுமானது என்று தான் சொல்ல வேண்டும். ஆசிரியராக

நடித்த எஸ். ஹர்ஷதயாள் ஓரிரு நிமிடங்கள் தோன்றினாலும் சொல்ல வேண்டிய கருத்தை அழுத்தமாக கூறி தனது பாத்திரத்தை செவ்வனே செய்திருக்கிறார். ஒளிப்பதிவு சராசரிக்கு மேலிருந்தது.ஆனால்இங்கு முக்கிய மாகக் குறிப்பிடுவதற்குரியது இவர் தனது படப்பதிவுக்காக பயன்படுத்திய கமராவே. இக்கமராவைப் பார்த்து நான் ஆச்சரியப்பட:டுப் போனேன். இந்த கமராவால் இவ்வளவு தூரம் அழகாக படப்பிடிப்பு செய்ய முடியுமா? என்ற கேள்வியை நான் எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன். இசை உபாயம், கணனி என்பதால் பெரிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. 'வியூகம்' இதில் கதை என்று ஒன்றும் பெரிதாக இல்லை ரோபோக்களின் தாக்கத்தில் உருவான படமென நினைக்கிறேன். ஒரு விஞ்ஞானியினால் இலத்திரனியல் மனிதன் உருவாக்கப் படுகின்றான் இவன் நாட்டில் அழிவுகளை ஏற்படுத்த இயந்திர மனிதன் ஒருவன் எவ்வாறு இலத்திரனியல் மனிதனை அழித்தொழிக்கின்றான் எனபதே கதை.

இதில் நடிகர்கள் நடிப்பதற்கு பெரிதாக சந்தர்ப்பமில்லை. ஹர்ஷ தயாலும், சுகிர்தரதயாலும் முறையே இலத்திரனியல் மனிதனாகவும், இயந்திர மனிதனாகவும் நடித்துள்ளார்கள். தொலைக்காட்சி செய்தி வாசிப்பவராக வரும் பத்மநாதன் ரித்திகா நல்ல தமிழ் உச்சரிப்போடு பார்வையாளரை கவர்கின்றார்.

'வீயூகம்' குறும்படத்தில் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய விடயம் இலத்திரனியல் மனிதன் தோற்றுவிக்கும் இலத்திரனியல் அலைகள் இயந்திர மனிதனின் விரல்களிலிருந்து துப்பாக்கி தோற்றம் பெறுவது அவர்கள் சடுதியாக தோன்றி மறைவது போன்ற காட்சிகளாகும். ..சாதாரண கமிரா ஒன்றையும் கணணி ஒன்றையும் வைத்துக் கொண்டு இவ்வள செய்ய முடியுமெனறால் கோடிக்கணக்கில் செலவுசெய்து திரைப்படம் எடுப்பவர்களுக்கு என்னத்தான் செய்யமுடியாது. இந்த கன்னி முயற்சிக்காக ஜானு பிருத்வியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இக்குறும்படங்கள் தொடர் .பான கருத்துகளுக்கு அப்பால் சென்று இன்னுமொரு கருத்தையும் பதிவு செய்வது ஆசிரியன் என்ற ரீதியில் எனது கடமையாகும்.

இலங்கையில் பாடசாலைக் கல்வி மாணவர்களை குறுகிய வட்டத்துக்குள் முடக்கி வைத்துள்ளது. பல்கலைக்கழக புகுமுக பரீட்சை ஒரு போட்டிப்பரீட்சை என்பதால் மாணவர்கள் பாடக் குறிப்பைக் காட்டி மாரடிக்க வேண்டிய நிலைமையுள்ளது.

மாணவன் தான் விரும்பிய துறையை தேர்ந்தெடுக்க கூடிய வாய்ப்புகள் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மாணவர்களிடம் வெளிக் கொணரக் கூடிய கற்கைத் துறைகள் இலங்கையில் இல்லை. பெற்றோர் தமது பிள்ளைகளை வைத்தியாரா கவோ அல்லது பொறியியலாளராக வோ பார்க்க விரும்புகின்றார்களே ஒழிய அவன் விரும்பும் துறையில் ஊக்குவிப்பதில்லை.

ஜானு பிருத்வி திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்றக் காலத்தி லேயே கணணியுடன் நிறைய ஈடுபாடு கொண்டிருந்தார்.அவர் திரித்துவக் கல்லூரி இந்து மாணவர் மன்றத்திற் காக வடிவமைத்த எனிமேஷன் (animation)ஒன்றை நான் பார்த்திருக்கி றேன். அது பலராலும் அப்போது



பாராட்டப்பட்டது பின்னர், அகில இலங்கை பாடசாலை மட்டத்தில் நிகழ்த்தப்பட்ட கணணி ' எனிமேஷன்' போட்டியில் நகரில் வாகன தரிப்பிட மொன்றில் எவ்வாறு இடத்தினை சேமிக்கலாம் என்ற எண்ணக்கருவை 'எனிமே ஷனில்' படைத்து அகில இலங்கை ரீதியில் தங்கப் பதக்கத்தினை தட்டிக் கொண்டார். இவர் மேலும் இத்துறை யில் வளர எனது வாழ்த்துக்கள்.

## வன்முறையின் ஊற்று எது!

மிதுலன்

உலகப்பெரும் இலக்கியங்களும் தமிழ் காப்பியங்களும் மீண்டும் மீண்டும் வன்முறையினை அடிப்படையாகக் கொண்ட பொருள் மரபை கொண்டு இலக்கியம் படைத்தன. சங்க இலக்கியம் முழுதும் வன்முறையினை தளமாகக் கொண்டு தான் இலக்கியம் படைத்தன. முதல்நாள் தந்தை, இரண்டாம் நாள் தனது மகன், மூன்றாம் நாள் தனது பேரன் என்று இழந்த மக்களைக் கண்டு எண்ணி மகிழ்ந்த தாய் தான் இலக்கியத்தில் உலாவருகின்றாள். தான் யாருக்காக போராடுகின்றோம்? எதற்காக போராடுகின்றோம்? என்று எண்ணிப்பார்த்திராத ஒரு மடமை சமூகத்தின் மயக்கம் தான் இலக்கியமாக காணபட்டதும் உண்டு இலக்கியங்கள் முழுதுமாக இது நமக்கு தெரிகின்றது. யுத்தத்தில் பயன் பெற்றவர்கள் அத்காலத்தில் இந்த பெரும் பெரும் யுத்தத்தங்களில் பயன் பெற்றவர்கள், அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டவர்கள் தனிமனித அரசனும் அவனின் சகபாடிகளும் தான். வள்ளுவர் கூட " போர் களத்தில் கையிலிருக்கும் வேலினை எதிரியின் யானை மீது எறிந்துவிட்டு, போர் செய்ய வேலொன்று தனது கையில் இல்லாததால் வேலை தேடிய அவன், எதிரியின் மார்பில் குத்தி நின்ற பகைவனின் வேலைப் பறித்து மகிழ்வான் என்கின்றார்." இக்கூற்றை வாசிக்கவேஆச்சரியமாக இருக்கின்றது

வன்முறை எப்படியெல்லாம் மகிழ்ச்சியினைத் தருகின்றது. வன்முறையை தடுக்க வேண்டுமென போரிட்ட சிந்தனைகள் கொண்ட சமணம், பௌத்தம் கூட இடைக் காலத்தில் இந்த வன்முறையியலுக்கு முன் தோற்றுப் போய்விட்டன. பின்னர் வந்த பக்தி பெருக்கக் காலப் பகுதியில் கூட தொண்டரடிப் பொடியாழ்வார் கடவுள் அடிகளாரின் எக்களிப்பை கூறும் போது எமனுடைய தூதர்களையே கொன்று வீழ்த்தி உடல் வேறு தலை வேறாக்கி அவற்றைக் குவியலாக்கி அதன் மீது வெற்றி முழக்கம் செய்கின்றனர் என்பார். எனவே இலக்கியம் என்ற பெயரில் இளம் உள்ளங்களின் நனவிளி மனதில் எதை விதைக்கின்றோம் என்பது தெரியாமல் இது நடக்கின்றது. கண்ணதாசன் கூட " யானை படைக் கொண்டு சேனை தளவென்று ஆளப் பிறந்தவன்" என்கின்றார். என்ன அவர் இராணுவத் தளபதியாக தன் மகனை அழைக்கின்றாரா? அமை- தியையும் அன்பையும் யார் பேசுகின்றார்கள்? பேசினாலும் போர் எண்ணமே மனத் தளத்தில் உள்ளது. அப்துல் கலாம் கூட இந்தியாவை வல்லரசு இந்தியா என்றே அழைக்க முற்படுகின்றார். வன்முறையியல் எமது தேசங்களின் தேசிய கொள்கையாகி விட்டதா?

* * *

# பெண்களுக்காக சித்தார் மேதை அனுஷ்காவின் குரல்

**எஸ். எஸ். ராஜேந்திரா**

சித்தார் மேதை ரவிசங்கர் மகள் அனுஷ்காவின் சித்தார் இசை எனக்கு மிகவும் பிடிக்கும். பல சந்தர்ப்பங்களில் அந்த இசையில் ஆழ்ந்து போயிருக்கின்றேன். நாள் முழுதும் அந்த இசையில் ஆழ்ந்து போக மாட்டோமா என்ற ஏக்கம். அப்படி அந்த வாசிப்பில் ஒரு லயிப்பு. இருக்கிறது மற்றவர்களை தன பக்கம் இழுத்துக் கொள்ளும் வல்லமை அந்த விரல்களுக்கு உள்ளது. அவர் ஒரு சொகுசு வர்க்கப் பிரதியாக இருந்தாலும் இசைக்குத் தான் மொழி இல்லையே. காற்றை தன் விரல்களால் இசையாக படைக்க கூடிய வல்லமை சிறப்பானது. அதற்காக சித்தார் இசையில் துளியும் எனக்கு ஞானம் கிடையாது. ஆனால் நான் இங்கு சொல்ல வந்த விடயமே வேறு.

அப்படிப்பட்ட இசை மேதையின் மகளாக அவர் இருந்த போதும் அவரும் சிறு வயதில் பெற்றோர் நம்பிய பெரிய மனிதர்களால் பாலியல் மற்றும் உள ரீதியான தொந்தரவுகளுக்கு உள்ளானதாக அவர் குறிப்பிட்ட போது அந்த இசையில் ஒரு துளி இரத்தம் வடிந்தது.

பாலியல் வன்முறைக்கு எது தான் முற்றுப்புள்ளி என்பது ஒரு துயர கேள்வியாக எம்முன் நிற்கின்றது. 'வெலண்டைன் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி' பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர நூறு கோடி பெண்களும் ஆண்களும் முன் வரவேண்டுமென இணையத் தளத்தில் அழைக்கின்றார். வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்கின்றார். .

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராகபாதிக்கப்பட்ட பெண்களுக்காக அனுஷ்கா பேசும் விடியோ நாடா ஒன்றும் இணைய தளத்தில் தவழ விடப்பட்டுள்ளது.

பாலியல் முரண் நிலை என்பது ஒரு பௌதீக பிரச்சனை. நல்லொழுக்க போதனைகளால் மட்டும் அது தீர்ந்து விடப்போவதில்லை. ஆதலால் தான் அது சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அது வல்லாட்சி புரிகின்றது.

சமூக ஒழுங்கு என்பது பௌதீக அடிப்படையில் சீர்படும் போது அது ஒரு ஒழுங்குக்குள் வருகிறது. நமது மக்கள் சட்டத்தினால் இதற்கு ஏதாவது தீர்வுகிடைக்குமா என்றுபார்கிறார்கள். சட்டம்ஏதாவது தண்டனை கொடுத்துவிடாதா என்று ஏங்குகின்றனர்.

அங்கு தான் பிழையே இருக்கின்றது என்று நான் எண்ணுகின்றேன். சட்டம் என்பது ஒரு வல்லாட்சி தத்துவம் அதற்கு தண்டனை வழங்கத்தான் தெரியும். மனிதனின் பிழைகளின் மூலத்தைக் கண்டறிந்து அவற்றை தீர்க்கத் தெரியாது. காமம் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்ச்சி தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இயக்கங்களை ஏற்படுத்தி



இவ்வாறான பாலியல் வன் கொடுமைகளை தடுப்பது எவ்வாறென்று பல மட்டங்களிலும் அலசப்படுகின்றது. இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி ஒரு மத்தியதர வர்க்கப் பெண்ணுக்கு அல்லது உயர் குழாம் பெண்ணுக்கு இப்படி கூச்சல் போடுகின்ற மேல் வர்க்கம் அரசியல் ரீதியாக உருப்படியான ஏதாவது காரியம் பார்த்துள்ளதா என்றால்ஒன்றும் இல்லை. சம்பவம் நடந்து முடிந்து சலசலப்புக்கு பின்னே ஒவ்வொருவரும் தத்தம் காரியம் பார்க்கப் போய் விடுகின்றார்கள். பின்னர் அடுத்தப் பெண் கற்பழிக்கப்படும் வரை காத்துகிடக்கும் சமூகம் நம் சமூகம். இதற்கு மரண தண்டனையும் ஆண்மை நீக்கம், பெண்களை ஆண்களுடன் பேசவிடாமல் தடை செய்தல் என்றெல்லாம் கருதுவது இப்பிரச்சனைக்கு ஒருபோதும் பதிலாகிவிடாது. சில சமயங்களில் இது இவ்வன்கொடுமையினைக் கூட்டவும் கூடும். எமது

பொதுவான கருத்து இவ்வாறான பாலியல் பிரச்சனைத் தான் பாலியல் வன் கொடுமைக்குக் காரணம். சமூக அமைப்பு சீர் பெறாத எல்லாச் சமூகங்களிலும் பாலியல் கொடுமைகள் இருந்தே தீரும். அமைப்பை மாற்றுவதென்பது எல்லா சமூகங்களும் சேர்ந்து ஆற்றவேண்டிய பணி.. அது உடனடியாக நடக்காது போகலாம். பாலியல் வன்கொடுமையைத் தீர்ப்பது ஒரு வழிப்பாதை என்று எண்ணத் தேவை இல்லை. பாலியல் வன்கொடுமை என்பது பாலியல் பிரச்சனையின் ஓரம்சமாக தோன்றுகின்றது. பாலியல் உத்வேகத்தை ஒரு சமூக பிரச்சனை என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும் பசிப்பது மனிதனது இயல்பான பிரச்சனை. அதனைத் தீர்க்க முடியாமல் இருப்பது சமூகத்தின் பிரச்சனை. பசிக்காக திருடுவது என்பது குற்றம்தான் அதற்காக தண்டனை வழங்குவதுசட்டத்தின் கடமையாக இருந்துவிட்டுபோகட்டும் ஆனால் அதை விட எமக்கான சமூக கடமைகள் இருக்கின்றன.

இதில் இரண்டு பணிகள் எம் முன் இருக்கின்றன. ஒன்று அரசு பாலியல்பிரச்சனைத் தொடர்பான கொள்கை ஒன்றை வகுத்து அதன் அடிப்படையில்காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மற்றது சமூக அமைப்புகளும், இயக்கங்களும் பாலியல் விழிப்புணர்வு பாதுகாப்பு மற்றும் புரிந்துணர்வு கூட்டங்கள் என்பவற்றை நடத்தி அதன் மூலம் பாலியல் ரீதியான பிரச்சனைகளைத் தீர்க்க முயல-லாம்.குடும்பத்தினர், பெற்றோர், இளைஞர்கள் என்போருக்கு இது தொடர்பாக தெளிவுருத்தல் மிக அவசியமாகவுள்ளது. இன்னும் தெளிவாக கூறுவதாயின் ஆரோக்கியமான குடும்ப அமைப்புகள் உருவாகின்ற போது பாலியல் ரீதியான ஆரோக்கியமான வடிகால்கள் இடம் பெறும் போது பாலியல் வன் கொடுமை-களை போதுமான அளவு குறைக்கலாம் ஆனால் திரைப்படங்கள்இணையதளங்கள் கேபள் டிவிகள் என்பனவும் இப் பிரச்சனைக்குக் காரணமாக இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்


# எனது நூலொன்றின் அறிமுகம் ஏடுகளின் திறனாய்வு மதிப்பீடுகளில் சில..

**கே.எஸ். சிவகுமாரன்.**

வழமையாக ஓர் எழுத்தாளன் தான் எழுதிய நூலை தானே திறனாய்வு செய்வதில்லை.ஆயினும் வழக்கத்துக்கு மாறாக நானே எனது அண்மைக்கால நூலொன்றை விபரம் தந்திடும் முகமாக வாசகர்களுக்காக இங்கு அறிமுகம் செய்கின்றேன்.பரவலாக இந்நூல் இன்னமும் அறிமுமாகவில்லை.இலங்கை தமிழ் இலக்கியம் உட்பட நாடகம், சினிமா ஆகியவற்றை திறனாய்வு செய்யும் நூலாக அண்மைய ஏடுகளின் திறனாய்வு. மதிப்பீடுகள் சில என்ற இந்த நூலை கொழும்பு 'மீரா பதிப்பகத்தார்' வெளியிட்டுள்ளனர். இந்த நூலில் 96 பக்கங்கள் உள்ளன. விலை ரூபாய் 200, பள்ளிக் கூட உயர் வகுப்பு மாணவர்களும், பட்டதாரி பயிலுனர் மாணவர்களும் இதில் பயன் பெற நிறைய வாய்ப்புண்டு. இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றின் சில முக்கியப் பகுதிகள் இங்கு தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் அதனுடன் தொடர்புடைய கலைகளைப் பற்றிய தகவல்களும் அடங்கியுள்ளன. உதாரணமாக தகவல் தொழில்நுட்ப கற்கை மாணவர்களுக்கு அடிப்படைத் தகவல்களை தரும் 'information super highway' என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

தர்மசேன பத்திராஜா நெறிப் படுத்திய விவரண சித்திர அம்சங்களைக் கொண்ட 'In search of a Path' என்ற படம் பற்றிய குறிப்பும் இனநெருக்கடி சம்பந்தமாக சித்தரிக்கும் சில குறிப்புகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் திருப்பு முனையில் இடம்பெற்ற யாழ்ப்பாண சமுதாயத்தை சித்தரிக்கும் ஆங்கில நாவலொன்றின் திறனாய்வும் இதில் இடம்பெற்றுள்ளது. நாவலின் பெயர் 'A flower of the field' இதனை எழுதியவர் எ.சி . பார்குமாரகுலசிங்கம். இஸ்லாமிய எழுத்தாளராகிய வெலிமடையைப் பிறப்பிடமாகக் கொண்ட 'ரிசானா மொகமட்' எழுதிய கவிதை நூல் ஒன்றும் இங்கு திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. மலையகக் கவிதைகளைப் படித்ததனால் ஏற்பட்ட அருட் உணர்வினால் கே. விஜயன் எழுதிய நகைச்சுவை கட்டுரைகள் அடங்கிய 'பலே பலே வைத்தியர்' என்ற நூலும் அறிமுகமாகின்றது. இதில் கல்வி தொடர்பான கட்டுரைகள் அடங்கிய நூலென்றை எம். எய்ச் . எம் .யாக்கூப் மொழி பெயர்த்துள்ளார். 'Tofo–chan' என்ற இந்நூலின் ஆசிரியர் ஒரு ஜப்பானியர் ஆவார் பெயர் 'Tetsuko Kuroyanagi'

இந்த நூலின் முக்கியத்துவம் குறித்து திறனாய்வு பேசுகிறது. கொழும்பு 'லயனல் உவென்ட்" மண்டபத்தில் கொழும்பைச் சேர்ந்த இளம் தமிழ் பெண்கள் ஒரு ஓவியக் கண்காட்சியை நடத்தியிருந்தனர். உண்மையில் 'கௌசிகன் ராமையா' வின் மாணவிகளே அதனை ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ஓவியக் கண்காட்சி பற்றிய திறனாய்வு ஒன்று இந்நூலில் இடம் பெற்றுள்ளது. கொழும்பு மேடை நாடகங்கள் எவ்வாறு வளர்ந்தன என்பதை விளக்கும் கட்டுரை ஒன்றும், 1990 களில் இடம்பெற்ற நாடகங்களை மையமாகக் கொண்டும் இங்கு எழுதப்பட்டுள்ளது. அதே போன்று யாழ்ப்பாணத்தின் நெருக்கடியான காலகட்டத்தில் கலாச்சார மறுமலர்ச்சியில் பங்களிப்பு செய்த பேராசிரியர் என். மரியம்சேவியரின் பங்களிப்புகள் மற்றுமொரு கட்டுரையில் விபரிக்கப்பட்டுள்ளன. சிற்பி (சி சரவணபவனின்) கதைகள் தெளிவத்தை ஜோசப்பின் பங்களிப்புகள், செங்கை ஆழியானின் 'கிடுகு வேலி' 1960 இல் வெளியான ஈழத்து சிறுகதைகள் எம். கனகராசனின் 'புடம்' என்ற கதை பற்றிய திறனாய்வு திருகோணமலை ஞானமனோகர், ஸ்ரீஸ்கந்தராஜாவின் கதைகள் பற்றிய திறனாய்வு மொழி வாணனின் குறுங்கதைகள் பற்றிய திறனாய்வு குறிப்பு ஆகிய அம்சங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. .இந்நூல் தற்போது கைவசம் இல்லையாதலால் அக்கறையுள்ள வாசகர்கள் இந்நூலை பொது வாசிகசாலையில் அல்லது கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பெற்று பயனடையலாம்.



**படைப்பாளர்களுக்கு ....**

காலாகாலமாக மரபு தன்மைகளுடன் நாம் தொடர்ச்சியாக எழுதி வருகின்றோம். ஆனால் கால மாற்றங்கள் சமூக மாற்றங்கள் என்பவற்றுக்கு ஏற்ப எமது எழுத்துக்களிலும் மாற்றங்கள தேவையல்லவா? எனவே எமது சமூகத்தில் நடக்கும் அன்றாட நடப்புகளை வேறு பல கோணங்களில் நோக்குவது ஆரோக்கியமானதெனக் கருதுகின்றோம் எனவே மாற்று சிந்தனைகளுடன் கூடிய படைப்புகளைத் தர முயற்சிப்போம்.

இரா. அ. இராமன்

**செல்லியும், பாரதியும்**

கவிஞர் செல்லியை தழுவித்தான் பாரதி கவிதைகள் எழுதினார். பாரதி கூறுவார், நன்மையும்அறிவும் எத்திசைதெனினும், யாவரே காட்டிலும் மற்றவை தழுவி வாழ்வீராயின் அச்சமொன்றில்லை' ஆனால் செல்லி, தன் வாழ்நாள் முழுதும் நாஸ்திகனாக இருந்தார் ஆனால் பாரதி, தன் வாழ் நாள் முழுதும் ஆன்மீகத்தைக் கடைப் பிடித்தார்.



## துளிர்

விஜயலக்ஷ்மி சேகர்

ஆழச் செல்லும் வேர்கள்
அர்த்தத்துடன் உதிர்ந்துவிட்ட
இலைகள்,
உறுதியான பட்டைகள்
கண்மணி
இது உன்
இலையுதிர்காலத்துக்
கோலம்
பார்ப்பவர் கண்களுக்கு
நீ
பட்டமரமாகாலாம்
ஆனால்
எனக்குத் தெரியும்
பூமி எல்லையின்
அடிவரை தேடும்
உன் தாக வேர்களின்
தேடல்
தொடராய்....

ஓர் நாள்
குயில் ஒன்று கூவ
வசந்தம் மலரும் - உன்
கிளைகள் துளிர்க்கும்
பறவைகள் கூடுகட்டும் –
உன் நிழலில்
மானுடம் இளைப்பாறும்

**மனமோகியின்
வேண்டுகோள்**

மனமோகி என்பது ஒரு சிற்றிதழ் எனவே படைப்பாளர்கள் மன-மோகிக்கு எழுதும் போது ஒரு சிற்றிதழுக்கு எழுதுகின்றோம் என்பதை கவனத்தில் கொண்டு சுருக்கமான கட்டுரைகளையோ கவிதைகளையோ அனுப்பி வைப்பது நன்று.

## நானும், அவனும்

அனுகூலன்

காற்றை
சலவை செய்து கொண்டு
பறக்கிறது
வண்ணத்துப் பூச்சி

காலத்தை
தரித்துப் போட்டுவிட்டு
பறக்கிறான் - என்
பையன்

ஆறுகளும் அருவிகளும்
கழிவுகளை
தரித்துவிட்டு
பூங்கனலாய் பாய்கிறது

முன் வீட்டுப் பையன்
ஈ-மெயிலில்
காத்துக் கிடக்கிறான்
காதலுக்காக

சோர்வுகளை
துடைத்தெரிந்து விட்டு
துளிர்கிறது
வயல் வெளிகள்

என் மனைவி
சோதிடனின்
மந்திரக்கோலுக்கு . . .
கட்டுப்பட்டு
காலத்தை கணிப்பிட
காத்துக்கிடக்கிறாள்.

காலத்தை
விரட்டிக் கொண்டு
நான்
' ஈசி செயரில் '
ஒடுங்கிக் கிடக்கிறேன்







## வேசிகளைப்பற்றிய சித்திரம்

யசோதா (நிவேதினி)

பழங்கால கிரேக்கச் சொற்களான போர்னே, க்ராஃபோஸ் ஆகியவற்றை இணைத்து அன்று உருவாக்கப்பட்ட போர்னோகிராபி (ஆபாச எழுத்து) என்ற சொல்லுக்கு வேசிகளைப் பற்றிய எழுத்து என்று பொருள் போர்னே என்றால் வேசி. அதிலும் குறிப்பாக மிக மிக இழிவான வேசி, என்று பொருள். பழங்கால கிரேக்கத்தில் உள்ள அனைத்துக் குடிமகன்களும் பயன்படுத்தும் வேசிகளையே அவர்கள் இவ்வாறு அழைத்தார்கள். அங்கே அடிமைகள் உள்ளிட்ட அனைத்துப் பெண்களிலும் மிகவும் மலிவானவளாகவும், மிகவும் இழிவாக மதிக்கப்பட்டவளாகவும், பாது காப்பற்றவளாகவும் அவள் இருந்தாள். இந்த போர்னே எளிமையாகவும், நேரடியாகவும் சொல்வதென்றால் அவள் ஒரு பாலியல் அடிமையே. க்ராஃபோஸ் என்றால் எழுதுவது, தீட்டுவது அல்லது வரைவது. போர்னோக்ராஃபி என்றால் பாலியல் பற்றி எழுதுவது என்றோ அல்லது காம உணர்வுச் சித்திரங்கள் என்றோ அல்லது பாலியல் செயல்பாடுகளைப் பற்றிய சித்திரங்கள் என்றோ அல்லது நிர்வாண உடல்கள் பற்றிய வர்ணனைகள் என்றோ அல்லது பாலியல்ரீதியான எழுத்துக்கள் என்றோ பொருள் அல்ல. அது வேறு விடயங்களுக்கான அலங்கரிக்கப்பட்ட பெயரும் அல்ல. பெண்களைக் கீழ்த்தரமான வேசிகளாகச் சித்தரிப்பது என்பது தான் அதற்குப் பொருள். பழங்காலக் கிரேக்கத்தில் எல்லா வேசிகளும் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்பட போர்னோக்கள் அப்படி கருதப்பட்டார்கள். தற்கால போர்னோக்ராஃபி கறாராகவும், அந்தச் சொல்லுக்கேயுரிய அர்த்தத்திலும், அதன்அடிப்படையான பொருளை அது உறுதிப்படுத்துகிறது. கீழ்த்தரமான வேசிகளைப் பற்றிய அதாவது நமது மொழியில் சொல்வதெனில் விபச்சாரிகள், பசுக்கள், யோனிகள் ஆகியவற்றை பற்றிய எழுத்து என்பதே அதன் அடிப்படைப் பொருள். அந்தச் சொல்லின் இரண்டாவது பகுதியான க்ராஃபோஸ் ஐப் பொருத்த வரையில் மட்டும் தான் பொருள் மாறியுள்ளது

இப்போது நிழற்படக் கருவிகள் இருக்கின்றன. நிழற்படமும்; திரைப்படமும் காணொளியும் (Video) இன்னும் பல இருக்கின்றன. சித்தரிக்கும் முறைகளின் எண்ணிக்கையும் வகைகளும் அதிகரித்துள்ளன. ஆண் மேலாதிக்கத்தின் அகராதியில் மூழ்கித் திளைக்காத ஒருவரால் வேசி என்ற சொல்லைப் புரிந்துகொள்ள முடியாது. பெண்களை வேசிகள் என்ற வகையாகவும், குழுவாகவும் உருவாக்கியவர்கள் ஆண்களே. வேசி என்ற கருத்தாக்கத்தையும், வேசி என்ற அடைமொழியையும், வேசி என்ற அவமானத்தையும், விபச்சாரத் தொழிலையும், விபச்சார வணிகத்தையும், விபச்சாரத்திற்கான

சரக்கையும் வேசிகளாகப் பெண்கள் வாழும் யதார்த்த நிலைமையையும் உருவாக்கியவர்கள் ஆண்களே. ஆண்களின் பாலியல் ரீதியான மேலாதிக்கம் என்றும் புறவயமானது, உண்மையான அமைப்பிற்குள்ளே தான் பெண் வேசியாக உயிர் வாழ்கிறாள். வேசிகளைப் பற்றிய சித்திரமே (போர்னோக்ராஃபி) தன்னளவில் ,உண்மையானது.ஆண்களின் பாலுறவு அமைப்பில் மையமானது போர்னோக்கிராஃபியில் பெண்களின் பாலியல் தன்மை பற்றிய மதிப்பீடு புறவயமானது. ஏனெனில் உண்மையான பெண்கள் அப்படித் தான் கருதப்படுகிறார்கள். மதிப்பிடப் படுகிறார்கள். போர்னோகிராபியில் விவரிக்கப்படுகின்ற உடல்வலிமை நியாயமானது, உண்மையானது. ஏனெனில் ஆண்களின் உடல் வலிமை பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்தப் படுகின்றது.. ஏனெனில் பெண்கள் மிகமிகத் தாழ்ந்த வேசிகள் என்ற மதிப்பீடு வேசைத் தனமானது என்றும் கருதப்படுகிறது. 'போர்னொக்கிராஃபி' காம உணர்வுகளைப் பற்றிய சித்திரம் என்று பரவலாக நம்பப்படுவதானது பெண்களை இழிவு படுத்துவது தான் பாலியலின் உண்மையான மகிழ்ச்சி என்று கருதப்படுவதையே காட்டுகிறது.

பெண்களின் பாலியல் தன்மையே அசிங்கமானது என்றும் போர்னோகிராஃபியில் உண்மையிலேயே விவரிக்கப்படுவது இந்த அசிங்கம் தான். என்றும் நம்பப்படுவதிலிருந்து தான் போர்னோகிராஃபி அசிங்கமானது என்ற கருத்து உருவாகிறது. பெண்களின் உடல் (குறிப்பாக பெண்ணின் பிறப்புறுப்பு) தன்னளவிலேயே அசிங்கமானது என்றும் இழிவானது என்றும் நம்பப்படுவது தான் இதற்குக் காரணமாக இருக்கிறது. சிலர் கூறுவதைப் போல பெண்களின் பாலியல் தன்மையையே (ஆண்களைப்போல) அசிங்கமானது என்ற கருத்தை 'போர்னோகிராஃபி நிராகரிக்கவில்லை. மாறாக, இந்தக் கருத்தை போர்னோகிராஃபி எடுத்துப் பயன்படுத்திக் கொள்கிறது.

இக்கருத்தை போர்னோகிராஃபி விற்பனை செய்கிறது. பரப்புகிறது. அமெரிக்காவில் ஒளி மற்றும் ஒலி பதிவுத் தொழில், ஆகிய இரண்டையும் சேர்த்து போர்னோகிராஃபியில் ஏராளமான பணத்தை செலவு செய்வதற்கு ஏராளமான ஆண் நுகர்வாளர்கள்ஆர்வம் காட்டுகிறார்கள். போர்னோகிராஃபியை இப்போது "கேபிள்" தொலைக்காட்சி அவர்களிடம் கொண்டு செல்கிறது. வீடுகளில் காணொளிக் கருவிகளில் பயன்படுத்துவதற்கான வடிவங்களில் அதுஇப்போது விற்பனை செய்யப்படுகிறது. தொழில்நுட்பத்தால் திறந்து விடப் பட்டுள்ள சந்தைக்காக ஏராளமான வேசிகள் உருவாக்கப்பட வேண்டு மென்று அத்தொழில்நுட்பமே கோருகிறது. நிஜமான பெண்கள் கயிறால் கட்டப்படுகிறார்கள், படுக்க வைக்கப்படுகிறார்கள்,தொங்கவிடப்படுகிறார்கள், புணரப்படுகிறார்கள், கும்பலால்வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.சவுக்கால்அடிக்கப் படுகிறார்கள், அடித்து நொறுக்கப் படுகிறார்கள், வேறு செயல்களுக்குப் பலியாக்கப்படுகிறார்கள். நிழற் படங்களிலும், திரைப்படங்களிலும் (தமிழ் திரைபடம்) உட்பட நிஜமான பெண்களே வேசிகளாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். நிஜமான பெண்களே வேசிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். பெண்களைக் காட்சி ரீதியான நுகர்வுப் பொருளாக விற்கும் சந்தையை விரிவாக்குகின்ற தொழில்நுட்பம் வேசிகளின் அதை விரும்புவதாலும் இலாபத்திற்காக வேசிகளைக் கூட்டிக் கொடுப்பவர்களால் எராளமான வேசிகளை சந்தைக்குக் கொண்டு வரவேண்டியிருந்தது.

ஆயிரம் சொற்களைக் காட்டிலும் ஒரு படம் இந்த உண்மைச் சொல்லும். போர்னோகிராஃபிக்குத் தேவையான வேசிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பது சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நிழற் படங்களின் எண்ணிக்கை தான். தொழில்நுட்பமும் அதன் பயன்பாடும் வளர்ச்சியடைய அடைய, இவற்றின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இத்தகைய போர்னோகிராஃபியை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொள்ளும்படி நுகர்வாளரைத் தொழில்நுட்பம் அதன் இயல்பின் காரணமாக மிகவும் வேகமாக ஊக்கப்படுத்துகிறது. ஏற்கனவே எளிதில் நம்புகிற இயல்புடையவராக இருக்கும் நுகர்வாளர்கள் தனது அடங்கிப்போகும் தன்மையின் விளைவாக ஒரு போதும் சந்தேகம் அதில் கொள்வதில்லை. ஒரு நம்பிக்கையாளராக அவர் போர்னோக்ராஃபியிடம் வருகிறார். ஒரு பிரச்சாரகரராக அவர் போர்னோக்ராஃபியிடமிருந்து போகிறார். தொழில் நுட்பத்தால் அவரிடம் கொண்டு வரப்பட்ட பெண்களின் பயன்பாடுகளை அத்தொழில் நுட்பமே சட்ட பூர்வமானவையாக ஆக்குகிறது. ஆண்களின் அமைப்பில் பாலியல் என்பதே பெண்கள்தான். பாலியல் என்பதே வேசிகள் தான் அதில் போர்னே, அவள் மிகவும் இழிவான வேசி அதாவது அனைத்துக் குடிமகன்களுக்கும் சொந்தமான வேசி. அவள் பெறும் விபச்சாரி, அவள் வெறும் யோனி, அவள் ஒரு விலங்கு அவளை விலைக்கு வாங்குவது போர்னோக்ராஃபியை விலைக்கு வாங்குவதாகும். அவளை வைத்திருப்பது போர்னோக்ராஃபியை வைத்திருப்பதாகும். அவளைப் பார்ப்பது போர்னோ தாகும். அவளைப் பார்ப்பது போர்னோ க்ராஃபியை பார்ப்பதாகும். அவளுடைய பாலியலை, குறிப்பாக அவளுடைய பிறப்புறுப்பை பார்ப்பது போர்னோக்ராஃபியைப் பார்ப்பதாகும். பாலுறவில் அவளைப் பார்ப்பது பாலுறவில் வேசியைப் பார்ப்பதாகும். அவளைப் பயன்படுத்துவது போர்னோக்ராஃபியை பயன்படுத்துவதாகும். அவளை விரும்புவது போர்னோகிராஃபியிருப்புவதாகும்.அவளாகஇருப்பது போர்னோகிராஃபியாக இருப்பதாகும்.

"டில்லியில் ஒரு மருத்துவ மாணவி வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டமைக்கு இந்த போர்னோக்ராஃபி ஒரு காரணம். இணையதளங்களும், தொலைக்காட்சி நிறுவனங்களும், சினிமாக்காட்சிகளும் இந்த போர்னோக்ராஃபியை ஊக்கப்படுத்துகின்றன. இதில் பணம் சம்பாதிப்பதில் இவை குறியாக இருக்கின்றன. அரச அங்கீகாரமும், அனுமதியும் இதற்கு தாராளமாகக் கிடைக்கின்றன. ஏனென்றால் இவை எல்லாமே ஆணாதிக்க கும்பல்களின் நிறுவனங்கள் இவைகள் இன்னும் பெண்களை, நேரடியாக வேசிகள் என்று சொல்லாவிட்டாலும் பண்டைய கிரேக்கரைப் போல வேசிகளாகவே எண்ணுகின்றன.

எனவே பெண்களை பாதுகாப்பதற்காக போராடுகின்றவர்கள், பெண்களின் வாழ்வியலுக்காக போராடுகின்றவர்கள்வெறும் சுலோகங்க சுமக்கின்ற காகித போராளிகளாக இருப்பதை விடுத்து போர்னோக்ராபி இணையதளங்கள்,தொலைக்காட்சி நிறுவனங்கள்,சினிமாக்காட்சிகள்என்பவற்றின் போர்னோக்ராபியை வலிமையற்றதாக்குவதற்காகவாவது போராடட்டும்

*******

மனமோகி

டெயிலி நியூஸ் பத்திரிக்கை
புதன். 13 பெப்ரவரி 2013

# காலாண்டு இலக்கிய சஞ்சிகை
## கே. எஸ். சிவகுமாரன் எழுதுகிறார்.

மொழிபெயர்ப்பு : **கண்டி– ஏ.சந்தியாகோ**

“ தற்பொழுது இலக்கிய சஞ்சிகைகள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், எண்ணிக்கையற்ற அளவில் பிரசுரமாகி வெளிவருகின்றன. மிக அண்மையில் வெளிவந்திருப்பது கண்டிமாவட்டம்,பலகொல்ல, கெங்கல்ல என்ற இடத்தில் வதியும், கண்டி திரித்துவக் கல்லூரியின் ஆசிரியரும் ஆய்வாளரும், எழுத்தாளருமான ரா. நித்தியானந்தன் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட மனமோகி என்ற சஞ.சிகை. இது இரா. இராமன், எஸ்.ராஜேந்திரா என்பவர்களின் உதவியுடன் வெளிவந்திருக்கும் ஒரு காலாண்டு சஞ்சிகை. நாற்பது பக்கங்களை மட்டுமே கொண்ட இச்சஞ்சிகையில் 12 சுவாரஷ்யமான விடயங்களை மிகச் சிறிய எழுத்துக்களில், மிக நெருக்கமாக அச்சிட்டிருப்பது பார்வை சக்தி குறைந்த என்னால் வாசிப்பது சற்று கஷ்டமாகவே இருந்தது.

ஆறு பக்கங்களைக் கொண்ட, சினிமா இரசிகரும் விமர்சகருமான இளம் மாரி மகேந்திரனின், கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தை மதிக்கும் அதே சமயம், வியாபார ரீதியான கோடம்பாக்க சினிமாவைத் தாக்குவதில் உள்ள அவரது ஆர்வம், தன் எண்ணக் கருத்துக்களை, தகுந்த உதாரணங்களுடன் துள்ளியமாகவும், தெளிவாகவும் விமர்சகர்களிடம் எதிர்ப்பார்க்கப்படும் சமநிலையிலும் கூர்ந்து நோக்கத் தவறி விடுகிறார் என்பதை உணரக் கூடியதாக இருக்கிறது.

மேலும் தமிழக அரசியலின் விளிம்பிலிருக்கும் தொழில்சார்ந்த அரசியல்வாதிகள் பயன்படுத்தும் கவர்ச்சிகரமான சுலோகங்களை பல முறை வாய்விட்டுக் கூறுகிறார். சினிமா சம்பந்தமாக எழுதும் அவரை நான் அதைரியப்படுத்த விரும்பவில்லை. எனினும் அவர் முதலில், விமர்சனத்தின் கோட்பாடுகளையும், அறிவு கூர்மையுடன் எழுதும் கலையையும் கற்றுக்கொள்ள வேண்டும். அரசியல் சுலோகங்கள், அவரது அரசியற் தலைவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடும். ஆனால் தான் கையாளும் விடயத்தை பக்க சார்பற்ற முறையில் நோக்கத் தவறினால், அவை பயனற்றவையாகிவிடும். பதிப்பாசிரியரின் கூற்றின்படி மாற்றுக் கருத்துக்கள் தத்துவார்த்த குழுமத்தில் நின்று, தன் சஞ்சிகையின் இருத்தலை உறுதிப்படுத்த வேண்டும் என விரும்புகிறார். படைப்பாளியையும், வாசகனையும் உயர்ந்தவோர் அந்தஸ்துக்கு தன் சஞ்சிகை கொண்டு செல்ல வேண்டும் என அவர் விரும்புகிறார்.

இச்சஞ்சிகையில் ஐந்து கவிதைகளும், ஐந்து கட்டுரைகளும், இரண்டு பத்திகளும், பதிப்பாசிரியர் நித்தியானந்தனின் சிறுகதையொன்றும் படைப்பாளியையும், வாசகனையும் இடம்பெற்றுள்ளன. மலையகத்தின் பெருந்தோட்டப் பகுதியல் வாழ்ந்த இரு காதலர்களில், காதலி சிரிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் விளைவாக, இந்நாட்டை விட்டு தன் தாய்நாடு செல்கிறாள். பின்னர் அவர்கள் பரிமாறிக் கொள்ளும் கடிதங்கள் அவர்களைச் சென்றடையவில்லை. ஆனால் காதலன் எழுதிய ஒரு கடிதம் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் காதலியின் கைக்கெட்டுகின்றது. அப்பொழுது அவள் இரு பிள்ளைகளுக்குத் தாயாகி, விதவையாய் இருக்கிறாள். அவள் அக் கடிதத்திற்குப் பதில்எழுத, அவன் அவளை இலங்கைக்குத் திருப்பியழைத்து திருமணம் செய்து கொண்டு, வயது போன காலத்திலும் இருவரும் காதலர்களாக வாழ்கின்றார்கள்.

இலங்கையில் பெரும்பாலான தமிழ் சிறுகதைப் படைப்பாளிகள் கதைக்கூறும் வினைத் திறமைமையை மறந்து வெற்றுச் சொற்களான விளக்கங்களைக் கொடுக்கும் தேவையற்றப் பந்தியினை கதைக்குள் புகுத்தி விடுகின்றனர். இங்கு இவ்வெழுத்தாளரின் இக்கதை அப்படியானதல்ல.

பாரதியாரின் தனிப்பட்ட வாழ்கையில் நடைபெற்ற சில விசித்திரமான சம்பவங்களை தேர்ந்தெடுத்து அவற்றை தானே எழுதுவது போன்று மனப்பதிவை வாசகர்களில் ஏற்படுத்த முனைந்துள்ளார் ராஜேந்ரா. சில கட்டுரைகளில் இடத்தை நிரப்பும் நோக்குடன், சில பகுதிகள் மீண்டும் புகுத்தப் பட்டிருக்க வேண்டும், ஆக்கங்களில் எழுத்துப் பிழைகளும் மலிந்து காணப்படுகின்றன. இச்சஞ்சிகையின் இம்முதல் இதழின் பதிப்பித்தல், எத்தகைய கவனமுமின்றி, இதழாசிரியரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இனி வெளிவர இருக்கும் இதழ்களில் இத்தகைய தவறுகள் சரிசெய்யப்படும் என நம்புவோம். இந்தியாவில் சேரளப் பிரதேசத்தில் நடைபெற்ற ஓர் இலக்கிய விழாவில், அந்தனி ஜீவாவும் வேறு சில இலங்கையர்களும் கலந்துகொண்டு, பெற்ற மறக்கமுடியாத சில அனுபவங்களைப் பற்றி அந்தனி ஜீவா குறிப்புரையொன்றை எழுதியுள்ளார்.

தமிழகத்தின் தலை சிறந்த சிறுகதைப் படைப்பாளியான புதுமைப்பித்தனிடமிருந்த சில விசித்திரமான பழக்கவழக்கங்களைப் பற்றி ரா. நித்தியானந்தன் எழுதியுள்ளார்.

இடம்பெற்றுள்ள கவிதைகளில், கருத்துக்களில் புதுமையோ, வெளிப்படுத்துதலில் திறமையோ காணப்படவில்லை. இலங்கையில் வெளிவந்துள்ள, இன்று நூற்றுக்கணக்கான கவிதைத் தொகுப்புக்கள் யாவற்றிலும் மாறுதலற்ற ஒரேவகையான கூற்றுக்களையேகொண்டிருப்பதைத் தவிர,, அவை தற்காலத்துக்குரிய கவிதைகள் அல்ல.

டி.வி ஹ்யூம், எஸ்ரா பவுண்ட், எமிலவல் போன்ற கவிஞர்களால் இங்கிலாந்தில் உருவாகிய “ உணர்ச்சி அடக்கிய கவிதைப் புனைவு (படிம இலக்கிய) இயக்கத்தைப் பற்றி ஏதுமறியா அறிமுகமற்ற தமிழ் வாசகர்களுக்கு விளக்கமளிக்க எஸ். சுதர்ஷன் முயன்றுள்ளார். இவ்வியக்கத்தில் தோன்றிய கவிதைகளில், சில வரிகளை தமிழில் இவர் மொழிபெயர்க்கவும் முயன்றுள்ளார். இந்திய எழுத்தாளர் ரவிக்குமாரின் கட்டுரையின் சுருக்கமொன்றும் இச்சஞ்சிகையில் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மூல எழுத்தாளரான லூாசி எரிக்ரே

‘எமது இதழ்கள் ஒன்றாகப் பேசும் போது......’

தொடரும் பக்கம் 48

# பசு மாட்டின் சுயசரிதை

ரா. நித்தியானந்தன்

வண்டி
இழுத்தக்
காளையின் களைப்பில்
பசுமாடு,
அசதியாய்,
கவலைகளை ஆசை போட்டுக்
கொண்டு
சாலையை கடக்கிறது.
அதன் எண்ணமெல்லாம்
இனி
கன்றுகளுக்கு
பால் கொடுக்கவேண்டும்
ஈன்ற குட்டிகளை நக்க
வேண்டும்
புல்மேய
நேரம் ஒதுக்க வேண்டும்



வாலில்
ஏதோ ஒன்று
ஊர்வது போல உணர்ந்து..
திடுக்கிட்டு திரும்ப..
இடையில்
ஓர்
எருது
வாலை நீக்கி
வேலை காட்டுகிறது.
மனிதராய் இருந்தால்
திருப்பி அறைந்து விடலாம்.
கொம்பிருந்தும் பசுவாயிற்றே
விலகி நடக்கிறது.
அப்போது,
பட்டியிலுள்ள எருமை மாடு
தன் நினைவில்
விழுந்தது.
வதையின் சுமை
வயிற்றில் இடித்தது.

-தீரா நதி



# “நாதிரும், ஸிமினும் இவர்களுக்கிடையிலான பிரிவும்-
ஒஸ்கார் விருதினை வென்றுள்ள ஈரானின்

# முதல் திரைப்படம்

எம்.ரிஷான் ஷெரீப்



விவாகரத்துக் கோரி நிற்கும் ஒரு இஸ்லாமியத் தம்பதியிடமிருந்து காட்சி ஆரம்பிக்கிறது. விவாகரத்துக்கான காரணம் தமது பதினொரு வயது மகளின் எதிர்காலம். ஈரானின் நெருக்கடியான சூழ்நிலையில் தனது மகள் வாழ்வதை விரும்பாத மனைவி ஸிமின், தனது கணவன் நாதிருடனும் மகள் தேமேயுடனும் வெளிநாடு சென்று வாழத் தீர்மானிக்கிறாள். கணவனால் அவர்களுடன் வர முடியாத சூழ்நிலை. ஞாபகமறதி (அல்ஸீமர்) நோயினால் பாதிக்கப்பட்ட முதியவரான தனது தந்தையைப் பார்த்துக் கொள்ளும் கடமை தனக்கு இருப்பதால் அவளது வெளிநாட்டுப் பயணத்திற்கு உடன்பட மறுக்கிறான். மனைவி விவாகரத்துக் கோரி விண்ணப்பிக்கிறாள் .“ஒரு வேலைக்காரரை வச்சுப் பார்த்துக்கலாமே. அவருக்கு இவர் தன்னோட மகன் என்பது கூடத் தெரியாது.” “ஆனா அவர் என்னோட தந்தைன்னு எனக்குத் தெரியும்.” இவ்வாறாக நீதிபதியின் முன்னால் வாதிட்டுக் கொள்ளும் தம்பதியினது விவாகரத்து குறித்த விசாரணையின் முடிவில் விவாகரத்துக்கான காரணம் வலிதற்றதெனக் கூறி அவ் விண்ணப்பத்தை நிராகரிக்கிறது நீதி மன்றம். அதற்கு மேலும் கணவன், மகளுடன் சேர்ந்து வாழ விரும்பாத மனைவி தனது பெற்றோரிடம் சென்று விடுகிறாள். அதற்கு முன்பு, கணவன் வங்கி வேலைக்கும், மகள் பாடசாலைக்கும் சென்றதன் பின்னால் வீட்டில் தனித்திருக்கும் தனது வயோதிப மாமனாரைப் பார்த்துக் கொள்வது யாரென்ற கவலையில் மனைவி, ஒரு பெண்ணை அதற்காக ஏற்பாடு செய் கிறாள். அதன் பின்னர் அக் குடும்பத்தில் நடந்தவை என்ன என்பதுதான் படத்தின் கதை.

இஸ்ரேலை ஆட்டம் காண வைத்து, இஸ்ரேலின் திரைப்படமான ”ஃபுட் நோட்(Footnote)“டைத் தோற்கடித்து, இந்த வருடத்துக்கான 84 ஆவது ஒஸ்கார் விருது விழாவில், சிறந்த வெளிநாட்டுத் திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதினை வென்றெடுத்திருக்கிறது A Separation

பண்பாடுகளை விளக்கும் இத் திரைப்படமானது ஒஸ்கார் விருதினை வென்று தனது இருப்பை அமெரிக்கா விலும், இஸ்ரேலிலும் உரக்கச்சொல்லி யிருக்கிறது. இஸ்ரேலை ஆட்டம் காண வைத்து, இஸ்ரேலின் திரைப்படமான' ஃபுட்நோடடை ஜ' த்தோற்கடித்தது (Footnote) இந்த வருடத்துக்கான 84 ஆவது ஒஸ்கார் விருது விழாவில், சிறந்த வெளிநாட்டுத் திரைப் படத்துக்கான ஒஸ்கார் விரு- தினை வென்றெடுத்திருக்கிறது "எ ஸெ பரேஷன் - யு Separation (பிரிவொன்று)" எனும்இந்தஈரான்திரைப்படம்.ஈரானிய, இஸ்லாமியப் பண்பாடுகளை விளக்கும் இத் திரைப்படமானது ஒஸ்கார் விரு- தினை வென்றுதனது இருப்பை அமெரிக்கா விலும், இஸ்ரேலிலும் உரக்கச் சொல்லியிருக்கிறது.

படத்தின் முக்கிய கதாபாத் திரங்களான மூன்று ஆண்களும், மூன்று பெண்களும் இணைந்து படத்தினை தொய்வின்றி நகர்த்தியிருக்கிறார்கள். நாம் பார்த்துப் பழகியிருக்கும் சினிமா க்களில் மிகைத்திருக்கும் சினிமாத் தனங்களுக்கு மத்தியில் எந்தவொரு சினிமாத்தனமும் இல்லாத காட்சியமை ப்புக்களும்,நடிப்பும்,யதார்த்தமும் அதன் ஒவ்வொரு உணர்வுகளையும் பார்வை யாளனுக்குள்ளும் ஏற்படுத்தி விடுகிறது தனது கணவன் கடனாளியான நிலை- லயில், அன்றாட வாழ்க்கையைக் கழிக்கச் சிரமப்படும் ஏழைப் பெண் ராஸியா தனது கணவனுக்குத் தெரிய- ாமல் நாளாந்த வருமானத்துக்காக தனது ாமல் நாளாந்த வருமானத்துக்காக தனது ஆரம்பப் பாடசாலை செல்லும் மகளுடன் அம் முதியவரைக்கு பணிவிடை செய்துவிட்டு, அவ் வீட்டவர்கள் வந்ததும், தனக்கான ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்புகிறாள். ஒரு நாள், அவள் வீட்டினைச் சுத்தப்படுத்திக் கொண்டி ருககையில், முதியவர்வீதிக்குச் சென்று விடுகிறார்.வாகன நெருக்கடிக்கிடையே வீதியைக் கடக்கும் முதியவரைக் காப் பாற்ற அவள் ஓடுகிறாள்.

அடுத்த நாள் வங்கிக்குச் சென்ற நாதிரும், பாடசாலை சென்ற அவனது மகள் தேமேயும் வீட்டுக்குத் திரும்பி வந்து பார்த்தால் வீடு பூட்டப்பட்டிருக்கிறது. சாவி வைக்கு மிடத்தில்சாவி இல்லை. தன்னிடமிருந்த திறப்பைக்கொண்டு கதவைத் திறக்கும் கணவன், உள்ளே சென்று பார்க்கிறான். மகள் அலறுகிறாள். அவனது முதிய தந்தை கட்டிலருகே விழுந்து பேச்சு மூச்சற்றிருக்கிறார். அவரது கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. திகைத்துப் போகின்றனர் கணவனும் மகளும். முதலுதவிகள் செய்து தந்தையைக் காப்பாற்றுகிறான் கணவன். கோபமும், கழிவிரக்கமும்,அழுகையும் அவனிடம் மிகைத்திருக்கும் நிலையில் ராஸியா, தனது மகளுடன் வீட்டுக்கு வருகிறாள். தனது தந்தையை அநாதரவான நிலை- லயில், கைகளைக் கட்டித் தனியாக விட்டுச் சென்றதற்கு ராஸியாவைத் திட்டி வெளியே தள்ளுகிறான் கணவன். தனது பணத்தைத் திருடியதாகவும் அவள் மீது குற்றம் சுமத்துகிறான். அவள் வாசலிலிருந்து கதறுகிறாள். தனது அன்றைய ஊதியத்தைத் தருமாறு கெஞ்சுகிறாள்.



திடீரென ராஸியாவும் அவளது மகளும் கதறியழுவதைக் கேட்டுக் கதவைத் திறந்து பார்க்கிறாள் தேமே. படிகளில் விழுந்து எழும்பும் ராஸியா வைக் காண்கிறாள் அவள் .

அதன்பிறகுதான் அக் குடும்பத்தில் பாரிய சிக்கல்கள் எழுகின்றன. ராஸியா ஐந்துமாதக்கர்ப்பிணியாக இருந்திருக்கிற ாள் என்பதுவும், அந்தச் சம்பவத்தில் அவளதுகுழந்தைவயிற்றிலேயே இறந்து விட்டது என்பதுவும் அக் கணவனைக் கொலைகாரனெனக் குற்றம்சாட்டி அவ னைக் கைது செய்ய ஏதுவாக அமைகிறது. அதன் பின்னர் நடந்தவை என்ன? அக் கணவன், மனைவி விவாகரத்து வழக்கிற்கு என்னவானது? மகள் தேமே, முதிய தந்தை ஆகி யோரின் நிலைமை என்ன? என்பவ ற்றை உணர்வுபூர்வமாக இத் திரைப் படம்சித்தரிக்கிறது.


நடிப்பென்றே சொல்லமுடியாத அளவுக்கு மிகவும் ஆழமாக, கதாபா த்திரத்துடன் ஒன்றி வாழ்ந்து காட்டியி ருக்கிறார்கள் படத்தில் சம்பந்தப்பட்டி ருக்கும் எல்லா நடிகர்களும். பிரதான கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் நடிகர் பேமென் மோடி, திரைக்கதையாசிரிய ராகவும், ஆடை வடிவமைப்பாளராகவும் பல திரைப்படங்களில் பணியாற்றியவர். இத் திரைப்படத்தின் இயக்குனரான அஸ்கர் ஃபர்ஹதியின் திரைப்படமான “அபௌட்எல்லெ(AboutElle)”யில் 2009இல் அறிமுகமானவர். இத்திரைப்படத்துக் காக பெர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகர் விருதினை வென்றிருக்கிறார்.

கணவனோடு வாதிடும்போதும், கணவனுக்காக வாதிடும்போதும் மிகச் சிறப்பாகத் தனது நடிப்பினை வெளிப்படுத்தியிருக்கும் நடிகை லைலா ஹாதமி, சிறந்த நடிகைக்கான விரு- தினை . பல தடவைகள் வென்றவர். இவர்களது மகளாக இயக்குனரின் சொந்த மகளான ஸரீனா ஃபர்ஹதி மிகவும் சிறப்பாக நடித்திருக்கிறார். அழுகையையும், கவலையையும் உள்ளடக்கியபடி இவர் துயருரும் ஒவ்வொரு காட்சியும் மிகவும் தத்ரூபமானது.

கர்ப்பிணியாக வீட்டு வேலை- லகள் செய்கையிலும், அபாண்டமான பழி சுமத்தப்பட்ட நிலையில் அழுகை- கயுடன் குரலுயர்த்திப் பேசும்போதும், தனது குழந்தையை இழந்து கையறு நிலையில் தவிக்கும் போதும், கணவனு டைய கோபத்தை எதிர்கொள்ளும் போதும் என பல முகங்களைக் காட்டி நடிக்க முடிந்திருக்கிறது பணிப் பெண்ணாக நடித்திருக்கும் நடிகை சரே ஃபயத்திற்கு. ஏற்கெனவே பலமுறை சிறந்த நடிகை விருதினை வென்றிருக்கும்இவர் இத்திரைப் படத்துக்காக பெர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகை விருதினையும் வென்றிருக்கிறார் என் பது குறிப்பிடத்தக்கது .பல திரைப் படங்களை இயக்கி விருதுகளை வென்று சிறந்த இயக்குனராக தனது பெயரை நிலைநாட்டியுள்ள இயக்குனர் அஸ்கர் ஃபர்ஹதிக்கு இத் திரைப்படத்தின்லமும்சிறந்த இயக்குன ருக்கான விருது கிடைத்துள்ளது. எட்டு லட்சம் அமெரிக்க டொலர் செலவில் தயாரிக்கப்பட்டஇத்திரைப்படமானது, இதுவரையில் இருபது மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டியிருக்கிறது. அத்தோடு இத் திரைப்படமானது, பெர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் ஐந்து விரு- துகளையும், டர்பன் சர்வதேச திரைப்பட விழாவில் இரண்டு விரு- துகளையும், ஃபஜ்ர் திரைப்பட விழாவில் ஏழு விருதுகளையும், 15 ஆவது ஈரான் திரைப்பட விழாவில் நான்கு விருதுகளையும், இன்னும் பல முக்கியமான திரைப்பட விழாக்கள்

பலவற்றில் விருதுகள் பலவற்றையும் வென்றுள்ளது. விருதுகளையும், இன்னும் பல முக்கியமான திரைப்பட விழாக்கள் பலவற்றில் விருதுகள் பலவற்றையும் வென்றுள்ளது.

எல்லாக் கதாபாத்திரத்தின் மீதும் அனுதாபத்தை ஏற்படுத்தி விடும் படியானபடத்தின் ஒவ்வொரு காட்சியும் உரையாடல்களும நாற்காலியின் முனைக்குநம்மைஇழுத்து வருகிறது. காந்தமாக ஈர்க்கிறது. எந்த நிலையிலும் எதுவும் நடக்கலாம் எனும் உயிர்ப்பு நிலை படம் முழுவதும் விரவியிருக்கிறது. இக்கதை இடம்பெறும் களம் ஈரானாக இருந்த போதிலும், இக் கதையானது ஈரானுக்கு மாத்திரமானதேயல்ல. முழு உலகத்தின் எல்லா மூலைகளிலும் எக்கணத்திலும் நடைபெறக்கூடியது.நடுத்தரவர்க்க இஸ்லாமியக் குடும்பங்களிலெ மும் சிக்கல்கள், பாசப் போராட்டங்கள், பிரிவுகள் என முக்கிய மானவற்றை உள்ளடக்கி உருவாகியிருக் கும்இத் திரைப்படமானது ஈரானின் கலாசாரத்தையும்,அரசியலையும்மறைமுக மாகப் பிரதிபலிக்கிறது. பழமைக்கும் நவீனத்துக்கும்இடையிலான நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் நவீன ஈரானில் ஆண் பெண்



உறவு குறித்துச் சித்தரித்துள்ளதோடு, இஸ்லாமியர்களுக்கு குர்ஆன் மீதுள்ள மரியாதையையும் நம்பிக்கையையும் வெளிப்படையாகக்காட்சிப்படுத்தியுள்ளதன் மூலம் அமெரிக்காவின், முஸ்லிம்கள் மீதான விவாத எண்ணங்களையும் அசைத்துப் பார்க்கிறது. திரைப்படத்தில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் தனது மார்க்கத்தின் எல்லைக்குள் நின்று உண்மையாகவும், நேர்மையாகவும் வாழப் போராடுகின்றமையை எடுத்துக் காட்டுகிறது

ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது ஈரான் திரைப்படமாக இது இருப்பதோடு, ஒஸ்கார் விருதினை வென்ற முதல் ஈரான் திரைப்படமாகவும் இது அமைகிறது. ஈரானிய மக்கள் இத் திரைப்படத்தைக் கொண்டாடுகிறார்கள். ஒஸ்கார் விருதினை வென்றதை விடவும்,தமது எதிரிதேசமான இஸ்ரேலின் திரைப்படத்தைத்தோல்வியடையச் செய்து முதலிடத்தைப் பிடித்ததனால் ஈரானில் இத் திரைப்படம் மிகவும் முக்கியமான ஒன்றாகவும் அமைந்திருக்கிறது. பெண்ணுடலையும் ஆபாசங்களையும் காட்டி பார்வையாளர் களை ஈர்க்கும் நமது இந்திய மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்களுக்கிடையில், துளியும் ஆபாசமற்றும் சிறந்த, உலகத்தரமான, நல்ல திரைப்படங்களைத் தர முடியுமென்று நீரூபித்திருக்கிறது இந்த ஈரானியத் திரைப்படம்.பல நல்ல திரைப்படங்களை உலகுக்குத் தந்திருக்கும் ஈரான், இத் திரைப்படத்தின் மூலமும் தனது படைப்பாற்றலை மீண்டும் உறுதியாக நிலைநிறுத்தியிருக்கிறது. வரவேற்போம் நன்றி :கீற்று

mrishanshareef@gmail.com



சிறுகதை

# சத்தமில்லா யுத்தங்கள்

**சந்திரவதனா செல்வகுமாரன்**

" இந்த உடுப்பு எனக்குப் பிடிக்கேல்லை இதை ஆருக்காவது குடுங்கோ" என்று சொல்லி கழற்றி எறிவது போல,அம்மா எனக்கு அவரைப் பிடிக்கேல்லை, நான் தனிய வாழப் போறன். என்று துளசி சொன்னபோது கோமதிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

" என்ன நீ விளையாடுறியே? அதென்ன பிடிக்கேல்லே என்றதும் அவரை விட்டிட்டுத் தனிய வாழப் போறன் என்றதும்......! எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. உனக்கென்ன பைத்தியம் கியித்தியம் பிடிச்சிட்டுதே?" கோமதி அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய்க் கத்தினாள்.

" இல்லை அம்மா, எனக்குப் பைத்தியமும் இல்லை, கியித்தியமும் இல்லை. அவரோடை வாழத்தான் பிடிக்கேல்லை" துளசி சற்று எரிச்சலுடன் கீச்சிட்டாள்.

' என்ன கிரகசாரமடா இது! ஐநூறு கிலோமீற்றர் தூரத்திலை இருக்கிற ஹனோபர் வரை போய் தில்லையம்பலத்தார் நல்ல சாஸ்த்திரி என்று எல்லாரும் சொல்லுகினம் என்று அவரட்டைச் சாதகத்தைக் காட்டி பொருத்தம் பார்த்து, பிறகு ஐயரிட்டைப் போய் நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்துத்தானே' கோமதி குழம்பினாள்.

ஊர் கூட்டி, உறவுகளுக்கெல்லாம் சொல்லி, உலகின் அந்த அந்த அந்திலிருந்து இந்த அந்தம் வரை பார்த்துப் பார்த்து ஈ மெயிலாய் அனுப்பி, ரெலிபோனாய் அடித்து, கடிதங்களாய் எழுதி தம்பட்டம் அடித்து ஹோல் எடுத்து மணவறை போட்டு, இல்லாத அருந்ததி பார்த்து எல்லாரும் வாழ்த்தத் தானே திருமணம் நடந்தது.

ஐந்து மாதங்கள் கூட சரியாக நகரவில்லை. அதற்கிடையில் இவளுக்கு என்ன வந்தது. ஏன் இப்படி அதிரடி முடிவெடுத்தாள்? கோமதிக்குத் தலையில் இடி விழுந்தது போல இருந்தது.

" நீ கெட்டிக்காரி, மோளுக்கு நல்ல ஒரு பெடியனாப் பார்த்துக் கட்டிக் குடுத்துப் போட்டாய். யேர்மனிலை இப்படி படிச்ச நல்ல குடும்பத்துமாப்பிள்ளை கிடைக்கிறதெண்டால் லேசில்லை. நீ கெட்டிக்காரிதான். இனியென்ன? உனக்கு ஒரு பெரிய பாரம் குறைஞ்ச மாதிரித்தான்."

ஏதாவது விழாக் களிலோ அல்லது கடைத் தெருக்களிலோ யாராவது தெரிந்த தமிழ்ப் பெண்களைச் சந்திக்கும் போது அவர்கள் இப்படித்தான் சொல்லி கோமதியின் மனதைக் குளிர வைப்பார்கள்.

' நல்லாத் தான் இப்ப பாரம் குறைஞ்சிருக்கு, இவள் என்ரை தலையிலைபாறாங்கல்லை எல்லோ தூக்கிப் போட்டிருக்கிறாள்' கோமதியின்மனசு முணுமுணுத்தது.

துளசியோ ஒரு கவலையுமில்லாமல், 'சீடீ ஸ்ராண்ட்' இல் இருந்து சீடி ஒண்டை எடுத்துப் போட்டுபாட்டைஓடவிட்டிட்டு இடுப்பை வளைத்து வளைத்து ஆடிக் கொண்டிருந்தாள். கோமதிக்கு

அவளின் இந்த அலட்டிக் கொள்ளாத தன்மை எரிச்சலையே தந்தது. கோமதியும் அந்த நாட்களில் ஆடினவள் தான். ஆனால் அது பரதநாட்டியம். அதுவும் அவளின் கழுத்தில் எப்ப தாலி ஏறிச்சுதோ அன்று வரைக்கும் தான். அதற்குப் பிறகு எல்லாவற்றிற்கும் பிறகு எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

அவளுக்கு அந்த நாட்களில் வீட்டில் சில சமயங்களில் ஆடவேண்டும் போல ஆசை வரும். இனி ஆட முடியாதென்னும் போது அழுகையும் வரும்.

ஆடவேண்டும் போல் காலும் கையும் பரபரக்கும் போதெல்லாம " நீ ஆடுறது எனக்குப் பிடிக்கேல்லை." எண்டு அவள் கணவன் அது தான் துளசியின் அப்பா முதலிரவன்றே சொன்ன வார்த்தைகள் நினைவுகளில் ஒலிக்க அப்படியே கண்கள் பனிக்க கோமதி தன்னைக் கட்டிப் போட்டு விடுவாள்.

பரத நாட்டியம் மட்டுமா! இப்படி எத்தனை விடயங்கள் திருமண பந்தத்தில் உருவழிந்து போய்விட்டன. அதற்காக இந்த இருபத்தைந்து வருடத்தில் ஒருக்காலும் அவள் தன் கணவனை விட்டிட்டுப் போக வேண்டும் என்று நினைத்ததில்லையே

ஆனால் ஐந்தே ஐந்து மாதத்தில் அவள் பத்து மாதம் சுமந்து பெற்ற அவள் மகள் துளசி வந்து வேண்டிக் கொடுத்த பொம்மையை வேண்டாம் என்று சொல்வது போல கணவனை வேண்டாம் என்கிறாளே! என்ன செய்வதென்று தெரியாமல் கோமதி குழம்பினாள்.

இந்தக் காலப் பிள்ளைகளிடம் எதையும் அலட்சியமாக எடுத்துக் கொள்ளும் தன்மையும், எதையும் தூக்கி எறிந்து பேசும் தன்மையும் சற்று மிகை-யாகவே தான் உள்ளன. அதுவும் புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் ஒருவிதமா இரட்டைக் கலாச்சாரத்துள் அகப்பட்டு, அவர்களை அழுத்தும் மன உளைச்சல் காரணமாகவோ அல்லது எதிலும் முழுமையாக ஒட்டமுடியாத இயலாமை காரணமாகவோ தமக்குத் தான் எல்லாம் தெரியும்என்பது போல பெற்றோருடன் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு கோமதியின் மகளும் விதி விலக்கானவளல்ல.

முடியாத இயலாமை காரணமாகவோ தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்பது போல பெற்றோருடன் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு கோமதியின் மகளும் விதி விலக்கானவளல்ல. இரவுகளில் பிறந்த நாள் விழாக்களுக்கோ, அல்லது வேறு விழாக்களுக்கோ அல்லது ' டிஸ்கோவுக்கோ' செல்ல அனுமதி மறுக்கப்படும் போது துளசியின் முட்டி மோதலையும் வாக்குவாதத்தையும் சட்டை செய்யாதவள் போல் கோமதி நடித்திருந்தாலும்,இந்த ' யேர்மனிய' வாழ்வில் அது எத்தகையதொரு பாதிப்பை துளசியிடம் ஏற்படுத்தியிருக்கும் என்பதை அவள் உணராமலில்லை. அதனால் சமயம் வரும் போதெல்லாம் துளசியை தன்னுடன் அழைத்து, அன்பால் அணைத்து ஆறுதலான வார்த்தைகளால் அறிவுரை சொல்லுவாள். அது துளசியின் ஆதங்கங்களை முற்றாக சமாதானப்படுத்தவில்லை என்பது கோமதிக்குத் தெரிந்தாலும் கோமதியாலும் ஒன்றும் செய்ய முடியாமலே இருந்தது. கோமதியும் பெண் தானே. அவளும் இந்தக் கலாச்சாரம் பண்பாடு என்ற போர்வைக்குள் மூச்சடங்கி முக்குளித்தவள் தானே. ஆனாலும் இந்தக் கலாச்சாரம் பண்பாடு எல்லாம் உனக்குத் தேவையில்லை நீ ஐரோப்பியக் கலாசாரத்துடன் வாழ் என்று தன்



பெண்ணிடம் சொல்ல எந்தத் தமிழ்த்தாய் தான் மனந்துணிவாள்.

என்ன தான் புதுமை புரட்சி என்று பேசினாலும், எழுதினாலும் தமது குடும்பம் என்று வரும்போது எந்த பெணணும் இந்தக் கலாசாரம் பண்பாடுகளிலிருந்து நழுவி விடக்கூடாதே என்பது தான் பெண்ணைப் பெற்றவர்கள் எல்லோரதும் கவலை. இந்த நிலையில் தானுண்டு தன் குடும்பமுண்டு என்றும், சமூகம் என்ன சொல்லும் என்று பயந்தும் வாழும் கோமதியின் நிலை பற்றிச் சொல்லவே தேவயில்லை. கோமதி கூட ஒரு இரண்டும் கெட்டான் மனநிலையில் போராடுபவள் தான் படித்த, உலகம் தெரிந்த அவள் மனதுக்கும், நான் ஆண் என்ற திமிர்த்தனம் சற்றும் குறையாத கணவனுடனான அவள் வாழ்வுக்கும் இடையில் அவள் நிறையவே போராட்டம் நடத்தி விட்டாள். ஆனால் அவள் போராட்டம் எப்பொழுதுமே அவள் மனதுக்குள் தான். மற்றும்படி கணவன் எள் என்ற உடனே இவள் எண்ணெயாக நிற்பாள்.

இந்த மனதோடு ஒரு வாழ்வு, நியத்தில் ஒரு வாழ்வு என்ற இரட்டை வேஷம் கோமதி அறியாமலே கோமதியிடம் ஒருவித மன உளைச்சலைக் கூட ஏற்படுத்தியிருந்தது. அதனால் தானோ என்னவோ கோமதி துளசியின் விடயத்தில், துளசியின் சின்னச் சின்ன ஏமாற்றங்களையெல்லாம் புரிந்து கொள்ளக் கூடியவளாக இருந்தாள். இருந்தாலும் பெரிதாக ஒன்றும் செய்துவிட முடியாத நிலையில் துவண்டாள். துளசி பெண் என்ற ஒரே காரணத்துக்காக, சில சின்னச் சின்ன விடயங்களில் கூட தடைகள் விதிக்கப்பட்டு அனுமதிகள் மறுக்கப்பட்ட போது, துளசி அப்பா அம்மாவை மீற முடியாத இயலாமையில் பொங்கி எழுந்து, அழுது ஆர்ப்பரிக்கையில் கோமதியும் அழுதாள். நாங்கள் தமிழ்ப் பெண்கள் என்பதையும், பண்பாட்டின் பெருமையையும் விளக்கி அவளைச் சமாதானப்படுத்தினாள்.

ஆனாலும் துளசியின் ' ரீன்ஏஜ்' பருவம் துளசிக்கு மட்டுமல்லாமல், துளசியைத் திருப்திப்படுத்த முடியாத அம்மாவான கோமதிக்கும் கூட மிகுந்த மன உளைச்சலான வேதனையான கால கட்டமாகவே இருந்தது.

அதன் பிரதிபலன் தான் இதுவோ? துளசி கணவனை வேண்டாம் என்று சொல்வது ஏதோ பழி தீர்க்கும் படலம் போலவே கோமதிக்குத் தோன்றியது. கட்டுப்பாடுகளை உடைத்தெறிய அன்று பதினான்கு வயதில் அவளுக்கு முடியவில்லை. இன்று இருபத்தினான்கு வயதில் அவள் அப்பாவை மட்டுமல்ல இந்த சமூகத்தையே பழிவாங்க நினைக்கிறாளோ!

கோமதியின் சிந்தனை பல விதமாக எண்ணியது.

இருபத்து நான்கு வயதுப் பெண்ணுக்கு அடித்தோ, உதைத்தோ ஒன்றையும் திணிக்க முடியாது அதுவும் துளசி அப்பா போலவே பிடிவாதக்காரி. அவளிடம் அன்பால் மட்டும்தான் ஏதாவது செய்ய முடியும்.

என்ன செய்யலாம், துளசியை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்ற யோசனைகளோடே அன்றைய இரவு அமைதியின்றிய அரை குறைத் தூக்கமும், யோசனை கழிந்த விழிப்புமாய் கோமதிக்குக் கழிந்தது. விடிந்தும் விடியாத பொழுதிலேயே தூக்கம் முழுவதுமாய்க் கலைந்து விட எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாள்

க்கம் முழுவதுமாய்க் கலைந்து விட எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாள்.நினைவு மட்டும் துளசியுடன் எப்படிப் பேசலாமென்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது. கணவருக்குக் கூட இன்னும் நிலையைச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் ஒரு குதி குதித்து ஆர்ப்பாட்டம் பண்ணி, நல்ல வளர்புத்தான்வளர்த்து வைச்சிருக்கிறாய் என்று கோமதியையும் சாடிவிட்டு, வேலைக்குப் போயிருப்பார்.

கோமதியின் எண்ணம், கணவரின் காதுக்கு விடயம் எட்டாமலே துளசியின் மனத்தை மாற்றிவிட வேண்டுமென்பது தான்.கோமதி நினைவுகளுடன் போரா-டியபடி இருக்க துளசி எழுந்து இருக்க துளசி எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு வந்தாள். “அப்பா என்னவாம்” என்றாள்.

“அப்பாவுக்கு நானொண்டும் சொல்லேல்லை. சொன்னால் இப்ப ஒரு பிரளயம் எல்லோ நடந்திருக்கும். ஏதோ இண்டைக்கு நேற்றுத்தான் உனக்கு அப்பாவைத் தெரியும் போல இருக்கு உன்ரை கேள்வி. இதை என்னண்டு அப்பாட்டை நான் சொல்லுறது”

கோமதி தனது எரிச்சலையும் கோபத்தையும் வெளியில் காட்டாமல் துளசியின் வினாவுக்குப் பதிலளித்தாள்.

“அம்மா இது மறைக்கிற விசயமில்லை. அப்பா குதிப்பாரி எண்டதுக்காண்டி முழுப் பூசணிக்காயை சோத்துக்குள்ளை மறைகேலாது” துளசி கத்தினாள்.

“இஞ்சை பார் பிள்ளை இங்கை கத்துறதிலையோ, ஆர்ப்பாட்டம் பண்ணுறதிலையோ ஒரு அர்த்தமும் இல்லை. கொஞ்சமாவது யாதார்த்தத்தை யோசிக்கோணும். கலியாணம் எண்டுறது ஆயிரம் காலத்துப் பயிர். அதை



ஆயிரம் காலத்துப் பயிர். அதை நீ இப்படி தூக்கி எறிஞ்சிட்டு வாற விசயமெண்டு மட்டும் நினைக்காதே...” “ஏன் அவருக்கும் உனக்கும் இடையிலை என்ன பிரச்சினை நடந்தது? இன்னொருக்கால் அவரோடை கதைச்சுப் பார்க்கலாம்தானே?”கோமதி துளசியின் குணம் தெரிந்தவளாய் துளசியை ஆறுதல் படுத்தும் விதமாகக் கதைத்தாள்.

“அம்மா நானும் அவரும் கதைச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தனாங்கள். எனக்கும் அவருக்கும் ஒத்து வராது. என்ரை ‘இன்றெஸ்ற’ வேறை அவற்றை ‘இன்றெஸ்ற’ வேறை அதுதான்” துளசி இழுத்தாள்.

“கலியாணம் எண்டு நடந்தால் இரண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் குடுத்து இன்றெஸ்றகளை மாத்திரம் தான் வாழோணும். அதை விட்டிட்டு இதுக்காண்டி ஆரும் எல்லாத்தையும் தூக்கி எறிவினமோ? என்ன ஒரு முட்டாள்தனமான முடிவு எடுத்திருக்கிறாய்”வினவினாள் கோமதி

“பின்னை என்ன, உங்களை மாதிரி என்னையும் வாழச் சொல்றீங்களோ ? நீங்கள் ஆசை ஆசையாய் படிச்ச பரதநாட்டியத்தை அப்பாக்காண்டி விட்டது போல”

“அம்மா நான் வாழ ஆசைப்படுறன். ஆருக்காண்டியும்என்ரை ஆசையளை கனவுகளை புதைக்க நான் தயா-ரா இல்லை. வாழற போது அப்பாக்காண்டி நீங்கள் எல்லாத்தையும்விட்டுக குடுத்தீங்கள். உங்களுக்காண்டி அப்பா என்னத்தை விட்டுத் தந்தவர் எண்டு ஒருக்கால் சொல்லுங்கோ பார்ப்பம்.”

‘எங்கடை ஆக்கள் ஒருத்தருக் கொருத்தர் விட்டுக் குடுக்கிறது எண்டு சொன்னால் அதுக்கு அர்த்தம் பொம்பிளையள் எல்லாத்தையும் விட்டுக் குடுக்கோணும் எண்டுறதுதான். என்னாலை அது முடியாது”

தொடர்ச்சி .....48ம் பக்கம்



# கே.ஆர். டேவிட்டின் இரு சிறுகதைத் தொகுதிகள் ஒரு மதிப்பீடு

## லெனின் மதிவானம்

முற்போக்கு இலக்கியத் தளத்தில் தனித்துவமான ஆளுமைச் சுவடுகளைப் பதித்தவர் கே. ஆர். டேவிட். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதிவரும் அவரது இலக்கிய கொள்கை என்ன என்பதும் சுவாரசியமான வினாதான். இலக்கியம் உண்மையை சொல்ல வேண்டும். அது மனித வாழ்கையை பற்றி சொல்ல வேண்டும். அதற்கும் மேலாக மனிதர்களை பற்றி அந்த மனித வாழ்க்கையின் நாகரிகம் பற்றி வாசகர்களின் உள்ளத்தை தொடவேண்டும். டேவிட்டை பொறுத்தமட்டில், ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் உழைப்பை திருடி வாழும் சமூகவமைப்பில் உண்மையின் பக்கம் நின்று அம்வம்சங்களை படைப்பாக்க வேண்டும் என்பது அவரது மனிதாயமாக இருந்து வந்துள்ளதை அவரது வாழ்வும் படைப்புகளும் உணர்த்தி நிற்கிற்கின்றன. அந்த வகையில் எல்லோரும் பாராட்டும் படைப்பாளியாக இருக்கின்ற அவரிடத்தே தனது இலட்சியங்களையும் கொள்கைகளையும் காப்பாற்றிக் கொள்ளும் உறுதியும் காணப்படுகின்றது. என துணிந்துக் கூறலாம். அவர் அவ்வப் போது சிறுகதைகளை எழுதி வந்திருப்பினும் ‘வரலாறு அவளைத் தோற்றுவிட்டது’ என்ற நாவலே ஈழத்து இலக்கிய உலகில் அவரை கணிப்புக்குரியவராக்கியது. இந்நாவல் வெளிவந்த காலத்தில் அதிகம் பேசப்பட்டது. இத்தகைய சிறப்புமிக்க அசிரியர் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்ட சிறுகதைகளை தொகுத்து ‘மண்ணின் முனகல்’, ‘பாடுகள்’ என்ற தலைப்புகளில் இரு தொகுப்புகளை வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்விரு தொகுப்புகளையும் நோக்குகின்ற போது அவரது உலக நோக்கில், படைப்பாளுமையில் பெரிய மாற்றங்கள் ஏதும் இருப்பதாக தெரியவில்லை

இலங்கையில் நவீன காலத்தே எழுந்த இலக்கிய வடிவங்களில் சிறுகதைக்கான மவுசே அதிகரித்துள்ளதை அவதானிக்கலாம் அண்மைக் காலத்தில் இலங்கையிலிருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகள், இணையதளங்கள், இலக்கிய வெளியீடுகள் எனபனவற்றை அவதானித்தால் இவவம்சம் புரியும். உதாரணம் தேடி வெகுதூரம் அலைய வேண்டியதில்லை. கடந்த காலத்தில் வெளிவந்த ஈழத்து முற்போக்கு சிறுகதை தொகுப்பு, நீர்வைபொன்னையனின் கதைகள், நிமிர்வு,காலவோட்டம், தெணியானின் ‘இன்னொரு புதிய கோணம்’ ,‘ஒடுக்கப்பட்டவர்கள் இதயராசனின் முரண்பாடுகள், தம்பு சிவாவின் சொந்தங்கள், முதுசம்,

நந்தினி சேவியரின் நெல்லிமரபள்ளிக் கூடம், யோ.கர்ணனின் தேவதைகளின் தீட்டுத் துணி, சேகுவேரா இருந்த வீடு, காத்தியாயினி சபேஸின் தாய் மடி தேடி, மு. அநாகரட்சகனின் நிமிர்வு, வசந்தி தயாபரனின் காலமாம் வனம், சிவனு மனோஹரனின் கோடாங்கி, பிரமிளா பிரதீபனின் 'பீலிக்கரை,' பாக்குப்பட்டை, தேவ முகுந்தனின் 'கண்ணீரினூடே தெரியும் வீதி' இன்னும் இது போன்ற பலருடைய ஆக்கங்களையும் அது பற்றி வெளி வந்த ஆய்வுகளையும் நோக்குகின்ற போது இவ்வுண்மை புலப்படாமல் போகாது. இந்த பின்னணியில் நோக்குகின்ற போது டேவிட்டின் இவ்விரு சிறுகதை தொகுப்பும் கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும். இந்த போக்கினை பொதுவான தமிழ் இலக்கிய செல்நெறியாக கொள்ள முடியாதுள்ளது. என்பதை தமிழ் நாடடின் இலக்கிய போக்கோடு ஒப்பிடுகின்ற போது அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக தமிழ் நாட்டில் இன்று சிறுகதைக்கு சம அளவில் அல்லது சில வேளைகளில் அதனை விடவும் கூடுதலான அங்கீகாரமும் மதிப்பும் நாவலுக்கு உண்டு என்பதை அவதானிக்கலாம். சுமார் ஆயிரம் பக்கங்களை கொண்ட நாவல்களும் வெளிவந்து அவை வாசகர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. மிக அண்மையில் ளிவந்த பா. வேங்கடேசனின் "காவல் கோட்டம்" என்ற நாவல் இதற்கு தக்க எடுத்துக்காட்டாகும். அந்தவகையில் தமிழ் நாட்டின் இலக்கிய செல்நெறியிலிருந்து இலங்கையின் இலக்கிய செல்நெறி மாறுபட்டிருப்ப பதன் சமூகப் பின்னணி என்ன என்பது பற்றிய தெளிவுணர்வு இலக்கிய ஆராய்ச்சி மாணாக்கருக்கும் வாசகருக்கும் அவசியம் வேண்டப்பட்ட தொன்றாகும். இவ்வினாவுக்கான விடை தேட முனைகின்ற போது நாவல் சிறுகதை ஆகிய இலக்கிய வடிவங்களின் தோற்றத்திற்கும் சமூக பின்னணிக்குமான உறவு குறித்த பார்வை அவசியமானதாகின்றது .

நாவலே சிறந்த வடிவம் என்பதோ அல்லது சிறுகதை சமூக போராட்டங்களை சித்திரிக்காத இலக்கிய வடிவம் என்றோ நாம் முடிவக்கு வர வேண்டிய அவசியமில்லை என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் அவசியமாகும். இன்றை நசிவு தரும் சூழலில் நாவல் எவ்வாறு ஜனரஞ்கம் என்ற பெயரில் குடும்ப கதைகள்,மர்மக்கதைகள், சரித்திர கதைகள் என பொது மக்களிடையே விரக்தியையும் அவ நம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றதோ அவ்வாறே சிறுகதையும் அத்தகைய பண்புகளை அடிப்படையாக கொண்டு வெளிந்திருக்கின்றது. மறுப்புறத்தில் மக்கள் படைப்பாளிகள் நாவல் சிறுகதை ஆகிய இலக்கிய வடிவங்களை கொண்டு வெகுசன போராட்ட உணர்வை வெவ்வேறு தளங்களில் வடிவங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றனர எனபதை நாம் அறிவோம்.

இன்றைய உலகமயமாதல் சூழலில் அது தோற்றவிக்க கூடிய தனிமனித நெரிசல்கள், தனிமனித முரண்பாடுகள்கூடவே இவற்றையெல் லாம் மூடி மறைத்து அதிகாரத் திலிருப்பவர்களின் சௌகரியத்திற்காக தன்னலம் பேணி இழி தொழில் காக்கும் மனிதர்களின் ஈனச்செயல்கள் தனி மனிதர்களுக் கிடையிலான நெரிசல்களை முனைப்படைய செய் திருக்கின்றன. மேலும் கடந்த முப்பது வருடங்களாக எமது நாட்டில் இடம் பெற்ற இனவிடுதலைப் போராட்டம் பற்றிய ஆழ்ந்த நேர்மையான ஆய்வுகள் வெளி வராமையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத் தக்கதே.



ஆங்கில மொழிக்கு அடுத்த நிலையில் தமிழ் மொழியிலேயே இணையத்தள வளர்ச்சி காணப்படுகின்றது. இதற்கு மிக முக்கியமான அடிப்படை எமது நாட்டில் இடம் பெற்ற இனவிடுதலைப் போராட்டமும் அதனை அடியொட்டியயெழுந்த புலம்பெயர்வு வாழ்க்கையுமே இதற்கு காரணம் என்பதை தமிழ் இணைய தளங்களில் வெளியாகியுள்ள ஆக்கங்கள் சான்றாக அமைந்திருக்கின்றன. இத்தகைய பின்னணி நாவலை விட சிறுகதை தோன்றுவதற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்கியிருக்கின்றன என அமைதிக் கொண்டாலும், இனவிடுதலைப் போராட்டமும் அதுதோற்றுவித்திருக்கும் சமூக மாறுதல்கள பன்மைத்துவம் என்பனவற்றை முழுப் பரிமாணத்துடன் சித்திரிக்க கூடிய வடிவமாக நாவல் திகழ்ந்த போதும் இலங்கையில் இனவிடுதலைப் போராட்டத்தை சித்திரிப்பதில் நாவலை விட சிறுகதை ஏன் முனைப்புப் பெற்றுள்ளது என்பது முக்கியமான வினா. இது பற்றி இக்கட்டுரையின் முடிவில் விவாதிப்போம்.

மண்ணின் முனகல் என்ற தொகுப்பில் 'ஊர்வலம் செல்கின்றது'(1971),'கஸ்தூரி'(1973) .'இதயங்கள் கரைகின்றன'(1975), 'அதிர்வு'(1995), 'பாண் போறனை' (2010), 'உணர்வுகள் கட்டுடைந்தால்..'(1977), 'மிசின்பொட்டி'(1982), 'நாய்மூளை'(2009), 'சிறைக் கதவுகள் திறநதுக் கிடக்கின்றன'(1978),'கண்ணீர் கொந்தளிக்கும்' (1974), 'மண்ணின் முனகல்'(1999), நான் கேவலமானவனல்ல'(1985) என பன்னிரெண்டு கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே பாடுகள் என்ற தொகுப்பில் 'தாய் மையின் விலை'(1978), 'ஆசைச் சாப் பாடு'(1982), 'கண்ணீர் எப்ப முடி யும்'(1982), 'சுடுகாடு'(1982), 'சூடு கள்' (1983), 'மண்வாசனை'(1985) ,'பாடுகள்'(1986),' 'சிறுவாணம்'(1994), 'இருள்'(1994), 'ஒல்லித் தேங்காய்கள் (1995குறுணிக்கல்'(1995)விபச்சாரங்கள்' (2002) என பண்ணிரெண்டு கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன இக் கதையாசிரியரின் கதைகளை வாசித்த போது சில செய்திகள் முனைப்பாக தோன்றுகின்றன.

டேவிட்டின் சிறுகதைகளைத் தொகுத்து நோக்குகின்ற போது கடந்த மூன்று தசாப்தங்களாக எமது நாட்டில் நடைப்பெற்ற இனவாத யுத்தம் எமது நாட்டின் சமூகப் பொருளாதாரம், கல்வி, கலை , பண்பாடு சமூக்கட்டுக் கோப்பு போன்ற அம்சங்களில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை அவரது சிறுகதைகள் அழகுற எடுத்துக் காட்டுகின்றன. கடந்த காலங்களில் தான் அனுபவித்த துன்பத் துயரங்கள், இதனால் அவர் பெற்ற தாக்கங்களும், மனவெழுச்சிகளும் இங்கு பதிவாக்கப்பட்டுள்ளன. இவரது எழுத்துக்களில் தொண்ணூறு சத வீதமான பாத்திரங்கள் தொழி லாளர்கள், விவசாயிகள் ஆவார். மேலும் தமது வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும் விளிம்பு நிலை மனிதர்கள் பற்றியதாகவும் அக்கதைகள் அமைந்துள்ளன. ஒருபுறமான இனவாத அடக்கு முறைகளும் மறுபுறமான தமிழ் பாஸிசத்தின் நசிவு தரும் அரசியல் பயங்கரவாதமும் இம்மகளின் வாழ்வை சிதைவுக்குள்ளாக்கியது.இத்தகைய வாழ்வின் கொடுரங்களைங்களையும்

அவற்றினிடையே வாழும் மனிதர்களையும் இவரது கதைகள் வெவவேறு வகையில் சித்திரித்துக் காட்டுகின்றன.

இனவெறிக்கு பலியாகி தன் குழந்தைக்கு பாலூட்ட கூட மார்பு இல்லாத நிலையில் தவிக்கும் தாயை நாம் "நான் கேவலமானவனல்ல' என்ற கதையில் சந்திக்கின்றோம். இவ்வாறே இனவாத யுத்தத்தின் பாதிப்புகள் பற்றி கூறும் கதைகளாக அவரது அதிர்வு, பாண்போறணை, கண்ணீர் கொந்தளிக்கும், மண்ணின் முனகல், சிறுவாணம், குறுணிகல், விபச்சாரங்கள் ஆகிய கதைகள் அமைந்துள்ளன.

டேவிட்டின் கதைகளை நோக்குகின்ற யதார்த்தவாதத்தை துணைக் கொண்டே தமது படைப்புகளை ஆக்க முனைந்திருக்கின்றார். அவரது கதைகளில் வரும் வகைமாதியான பாத்திரங்கள் யாவும் சமூகத்தில் நடமாடும் மனிதர்களே. அந்தவகையில் யதார்த்த நிலை நின்று பாத்திர படைப்புகளை படைப்பதில் இக்கதையாசிரியர் வெற்றிப்பெற்றிருக்கின்றார்என்றே கூற வேண்டும். இவ்விடத்தில் முக்கிய செய்தியொன்றினைக் கூற வேண்டியுள்ளது. ஒரு படைப்பாளி சமூகத்தில் அடித்தட்டில் உள்ள மாந்தர்களைப் படைப்பாக்கிவிட்டார்என்பதற்காகஅவர் முற்போக்குவாதியாகி விட முடியாது. பல படைப்பாளிகள் தமது வர்க்க நலன் காரணமாக அறிந்தோ அறியாமலோ உழைக்கும் மக்களை கீழானவர்களாகவும் சில சமயங்களில் அவர்களை கிண்டலடிக்கும் பாணியிலும் பாத்திரங்களாக்கியுள்ளனர். அவ்வகையில் டேவிட் அடித்தள மக்களின் வாழ்வினை படைப்பாக்க முனைகின்ற போது இவர் அம்மக்களில் இருந்து தன்னை வேறுப்படுத்திக் கொண்டவராகவோ அல்லது உயர் குழாத்தினருக்குரிய மேட்டிமை மனோபாவத்துடன் படைப்பாக்க வில்லை. மாறாக இதய உணர்ச்சி உள்ள மனிதனொருவனாக அவர் இப்பாத்திர படைப்புகளைஉருவாக்கியிருக்கின்றார். எடுத்துக்காட்டாக "சிறைக்கதவுகள் திறந்து கிடக்கின்றன" என்ற கதையில் வரும் கனகம் என்ற பெண் கஞ்சா விற்று சிறைக்கு செல்கின்றாள். அவள் திரும்பி வரும் போது அவளது தவறு தொடர்கின்றது. விபச்சாரங்கள் கதையில் பால் தெழிலாளியாக வரும் கமலா, தாய்மையின் விலை வாழ்வுக்காக பால் தொழிலாளியா கமாறிவிட்டபொன்னமா இவ்வாறு இக் கதையாசிரியரில் வெளிப்படும் எண்ணற்ற பாத்திரங்கள் யாவரும் ஆடம்பர வாழ்க்கைக்காவோ அல்லது மாடமாளிகைக்காகவோ இத் தகைய செயல்களில்ஈடுப்பட்டவர்கள் அல்லர். அந்த வகையில் மக்களின் அடிப்படை பிரச்சனையான பசி பிரச்சனையை- அதனால் உருவாகின்ற சமூக பொருளாதாரப் பிரச்சனையை அதனை- யொட்டி மனித உறவுகளில் ஏற்படுகின்ற சமூகப்பிரச்சனைகளை வாழ்வியலுக் கூடாக அவர் படைப் பாக்கியிருப்பது சிறப்பானதாகும். இச்செயல்களுக்காக இம்மனிதர்களின் மீது கோபத்தைவிட அவர்களை உருவாக்கிய சமூகவமைப்பின மீதான கோபத்தையே வாசகனின் தோற்றுவிக்கின்றது. வாழ்வாதாரத்தை உத்தரவாதப்படுத்தாத சமூகத்தின் விளைவுகள் எத்தகையதாக உள்ளது என்பதை உணர்த்தி அவனது ஆன்மாவை உலுக்கிவிடக் கூடியதாக அப்பாத்திர படைப்புகள் உள்ளன.

படைப்பாளியொருவர் என்ன கருத்தை கூறுகின்றார், அவர் எப்படி சொல்கின்றார், அவர் கூறுவது வாழ்வாதாரத்துடன் எந்தளவு ஒத்துப் போகின்றது என்ற விடத்தில் தான்



வாழ்வாதாரத்துடன் எந்தளவு ஒத்துப் போகின்றது என்ற விடத்தில் தான் உத்திரப்படுத்தாத சமூகத்தின் விளைவுகள் எத்தகையதாக உள்ளது என்பதை உணர்த்தி அவனது ஆன்மாவை உலுக்கிவிடக் கூடியதாக அப்பாத்திர படைப்புகள் உள்ளன.

படைப்பாளியொருவர் என்ன கருத்தை கூறுகின்றார், அவர் எப்படி சொல்கின்றார், அவர் கூறுவது வாழ்வாதாரத்துடன் எந்தளவு ஒத்துப் போகின்றது என்றவிடத்தில் தான் படைப்பாளியொருவரின் வெற்றி தங்கியிருக்கின்றது. அந்த வகையில் தனக்கு முன்யாரும் கண்டிராத அறிந்திராக ஒரு விடத்தினை படைப்பாளியொருவர் அறிந்தும் கண் டும் கூறுவாராயின் அதுவே உண்மை யான படைப்பாகின்றது. வாழ்க்கையை நாம் புரிந்துக் கொள்வதற்கு மேலாக அவ்வாழ்க்கையின் இருண்ட பகுதியை நுண்ணயத்துடன் அறிந்துக் கொள்வதற்கு உணர்ந்துக் கொள்வதற்கு அப்படைப்பாளி நமக்கு துணைப்புரிகின்றார். இவ்வகையில் நாம் டேவிட்டின் கதைகளை நோக்குகின்ற போதுபல படி நிலைகளின்றும் வரம்புகளின்றும் அல்லற்படுகின்ற மனித வாழ்வு பற்றி தரிசனத்தை நாம் அறிந்துக் கொள்வதற்கு துணை நிற்கின்றார். அதனால் தான் அவரது படைப்புகளில் சமூகம் பற்றிய அறிவும் அதனடியாக தோன்றும் உணர்ச்சிகளும் உள்ளடக்கமாக இருக்கின்றது. மேலும் அதனை பொருத்தமான வடிவத்தில் வெளியிடுகின்றார். கருத்தை கதையாக சொல்லும் ஆற்றல் அவரித்தே சிறப்புற்றிருக்கின்றது என்பதற்கு அவரது சிறுகதைகள் தக்க ஆதாரமாக அமைந்துள்ளன. பல எழுத்தாளர்கள் வாசகனை சிந்தனையற்றவராக கருதி படைப்பில் இடையில் அல்லது பாத்திரங்களை தமது கருத்து பிரச்சாரர்களாக்கி தன் கலைப் படைப்பில் தானே செய்தியை வெளியிடுகின்றார்கள். டேவிட்டின் கதைகளில் வாழ்க்கை அனுபவங்கள் படைப்பாக்கப்பட்டுள்ளன இவ்விரு தொகுப்பிலும் அடங்கியுள்ள கதைகளைவாசித்த போது கலைப்படைப்பு பற்றி 'ஃப்டையேவ்' கூறிய கூற்று ஞாபகத்திற்கு வருகின்றது:

> "ஒரு கலைப்படைப்பின் இதயத்தில் ஆழ்ந்திருக்கும் கருத்து, சிந்தனை, உணர்ச்சிகளை எப்படி வெளியிடுவது என்று கலைஞன் எண்ணிப் பார்க்கும்போது, இந்நோக்கத்தை நிறைவு செய்ய எந்தச் சம்பவங்கள பயன்படும், அச் சம்பவங்களின் செயற்பாடு எந்தப் போக்கில் போகும், சம்பவங்களின் வரிசைத் தொடர் எப்படியிருக்க வேண்டும் என்ற வினாக்களுக்கு விடை காண்பதற்காகச் சிந்தனை செய்கி ன்றான்."

இவ்வகையில் புறவய யதார்த்தமும் அகவய உணர்வும் இணைந்தே டேவிட்டின் சிறுகதைகள் தோற்றம் பெற்றுள்ளமையால் இயல்பாகவே உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவம் பெற்று விளங்குகின்றது. படைப்பாளியின் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியும் சிந்தனையும் அதேயளவு வாசகனிடத்தில் பதிவதாக அமைவது இப்படைப் பாளியின் தனித்துவமாகும்.

மேலும்டேவிட்டின் கதைளில் காணப்படுகின்ற சிறப்புகளில் ஒன்று தான் இலங்கை மண்ணின் பலவேறு களங்களும் அவரது கதைகளில் இடம் பெறுகின்றது. அவ்வாறு அவ்வாழ்வை படைப்பாக்கும் போது அவ்வவ் பிரதேசத்திற்குரிய வாழ்வியல் அம்சங் களுடன் வெளிக்கொண

ரப்படுகின்றது. அவர் ஆசிரியராக மலையகத்திலும் மூதூரிலும் கடமையாற்றிருக்கின்றார். பின் உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று, தமது சொந்த ஊரான யாழ்பாணத்தல் கடமையாற்றி ஓய்வு பெற்றிருக்கின்றார். இக்கால சூழலில் அவர் பெற்ற அனுபவங்கள் இங்கு படைபாக்கப் பட்டள்ளன. உதாரணமாக "சுடுகள" என்ற கதையில் வருகின்ற வேலைக்கார சிறுவனின் பாத்தரத்தின் ஊடாக மலையகத்தின் வறுமை, வேலைக்காக செல்லும் சிறுவர்களின் உழைப்பு சுரண்டல், எஜமான வர்க்கத்தின் கர்ணக் கொடுரமான வதைகள் என்பனவற்றை அழகுற எடுத்துக் காட்டியிருக்கின்றார். அவ்வாறே "பாண்போறனை", "மண் வாசனை" ஆகிய கதைகளில் மூதூர் பிரதேசவாழ்க்கை காட்டப்படுகின்றது. ஏனைய அனைத்துக் கதைகளிலும் யாழ்பாண பிரதேச வாழ்வு படைப்பாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெவ்வேறு பிரதேச வாழ்வை படைப்பாக்க முற்படுகின்ற போது அம்மண்ணின் மனங் கமழும் பேச்சுவழக்கை சிறப்பாக கையாளுகின்றார். அவற்றில் யாழ்பாண பேச்சு வழக்கு, அம்மக்களிடையே காணப்படுகின்ற பழமொழிகள் என்பனவற்றை கையாளுவதில் தான் அவர் முழுமையாக வெற்றி பெற்றிருக்கின்றார் என்பதை அவரது சிறுகதைகளை வாசிப்பதன் மூலமாக அறிய முடிகின்றது.

இக்கட்டுரையாசிரியரின் மேற்படிக் கட்டுரை அதன் மூலப்பிரதியில் நீண்ட கட்டமைப்பைக் கொண்டிருந்ததனால் மனமோகியின் இடவமைதி கருதி கட்டுரையின் நோக்கமும் உள்ளடக்கமும் சிதைவுறாத வகையில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளதை இங்கு தெரிவித்துக் கொள்கின்றோம்

-ஆசிரியர்

இவ்வகையில் அவரது படைப்புகளில் பலமான அம்சங்களை சுட்டிக்காட்டிய அதேசமயம் அதன் பலவீனமான அம்சங்களையும் குறித்துக்காட்ட வேண்டியதும் அவசியமானதாகும்.

இவ்விடத்தில் இவர் பொறுத்து பிறிதொரு மதிப்பீட்டை செய்வதற்கு இன்னொரு படைப்புடன் ஒப்புநோக்குவது பொருத்தமானதாக அமையும். நீர்வை பொன்னையன் தனது கதைகளில் புதிய சமூக எழுச்சியைகாட்டுகின்றார். தனித்தனியாக பிரிந்து நிற்கும் உழைப்பாளி சக உழைப்பாளியொருவருக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக எவ்வாறு ஒன்றுபட்டு போராடுகின்றார்கள் என்பதை சித்திரித்துக்காட்டுவதில் அவரது 'மேடும் பள்ளமும்' என்ற கதை குறிப்பிடத்தக்கதொன்றாகும். பாழடைந்து போன மேட்டு நிலத்தில் விவசாயம்செய்வதற்காக உடையாரிடம் நிலத்தை பெற்ற கணபதி, தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தாரைவார்த்து இந்நிலத்தை பாலைவனமான அம்மண்ணை பசுமை நிறைச் சோலையாக மாற்றுகின்றார். அவ்விவசாயின் உழைப்பையும் அந்நிலத்தையும் அபகரிப்பதற்கு திட்டமிட்ட உடையார் தனக்கு வரவேண்டிய மொத்த கடனையும் ஒரே நேரத்தில் தருமாறு உத்தரவிடுகின்றார். கணபதியால் முடியாமல் போகவே அவரையும் மீறி அவரது தோட்டத்தில் உள்ள மரக்கறிகளை பிடுங்குகின்றார். நியாயம் கேட்க சென்ற கணபதியை உடையார் தாக்குகின்றார். இரத்த காயங்களுடன் கணபதி கீழே விழ அவர் மீது அனுதாபம் கொண்ட சக விவசாயிகள் ஒன்றிணைந்து போராட முற்படுகின்றாரகள். அவர்கள் படையெடுத்து மேட்டு நிலத்தை நோக்கி செல்கின்றனர்.



அக் கூட்டத்தில் யாரோ ஒருவருடைய தோளில் கணபதியும் தூக்கி செல்லப்படுகின்றார். இங்கு விவசாயிகள் தமது அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து உடையாரின் கட்டளையை மீறி போரா டுகின்றார்கள். சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் உணர்ந்து அதனை எதிர் த்துஉடையாருக்கு எதிராக விவசாயிகள் தாங்கள் ஒரு வர்க்கம் என்பதை உணர்ந்து போராடுவதைசிறப்பாக படைப்பாக்கிருக்கின்றார நீர்வைபொன்னையன். இவ்வம்சம் கோட்பாடக விபரிக்கப்படாமல் மனித உறவுகளின் அடிப்படையில் அவற்றை படைப்பாக்கியிருப்பது நீர்வையின் படைப்பாளுமைக்கு தக்க எடுத்துக் காட்டாக அமைகின்றது.

இவ்வகையில் டேவிட்டின் கதைகளை ஒப்பு நோக்குகின்ற போது அவை ஏற்றத்தாழ்வான சமூகமைப்பில் அது தோற்றுவிக்க கூடிய முரண்பாடுகள் துயரங்களை கண்டு கவலைப் படுவதாகதான் தோன்றுகின்றது. இந்த சூழலில் தமிழ் தேசியத்தின் குறுகிய அரசியல் போக்குகளை விமர்சித்தால் தாங்கள் மக்களிலிருந்து அந்நியப்பட்டு போவோம் என்ற அச்சம் நாவல் தோன்றாததற்கு பிரதான காரணமாக அமைந்திருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. இந்த அச்சம் களையப்பட வேண்டும். தமிழ் தேசியவாத போராட்டத்தின் இருவழி பாதை பற்றி அதன் பன்முகத் தன்மையை வெளிக் கொணரும் வகையிலான நாவல் வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த சூழலில் தமிழ் தேசியத்தின் குறுகிய அரசியல் போக்குகளை விமர்சித்தால் தாங்கள் மக்களிலிருந்து அந்நியப்பட்டு போவோம் என்ற அச்சம் நாவல் தோன்றாததற்கு பிரதான காரணமாக அமைந்திருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது. இந்த அச்சம் களையப்பட வேண்டும். தமிழ் தேசியவாத போராட்டத்தின் இருவழி பாதை பற்றி அதன் பன்முகத் தன்மையை வெளிக் கொணரும் வகையிலான நாவல் வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இவ்விடத்தில் இத் தொகுப்புகளில் காணப்படுகின்ற மிக முக்கியமான குறைப்பாடுதான்,இடையிடையே காணப்படுகின்ற எழுத்துப்பிழைகள் கருத்துப் பழைகளாக வாசகனை குழப்ப கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. பக்க வடிவமைப்பிலும் சில தவறுகள் இடம் பெற்றுள்ளன. மண்ணின் முனகல் என்ற தொகுப்பில் ந. இரவீந்திரனின் அணிந்துரையின் பக்க வடிவமைப்பின் போது அத்தவறு ஏற்பட்டுள்ளது எனவே அணிந்துரையை வாசிக்கின்ற போது தொடர்ச்சியின்மை காரணமாக குழப்பங்களை விளைவிக்க கூடிய அபாயம் இருக்கின்றது.

முடிவாக நோக்குகின்ற போது டேவிட் அவர்களின் சிறுகதைகள் காலத்தின் பதிவாக அமைந்திருக்கின்றது. அது பேரினவாதம் ஏற்படுத்திய வாழ்க்கை போக்குகளை சிறப்பா கேள்விக்குள்ளாக்குகின்றது. அவ்வாறே தமிழ் தேசியப் போராட்டம் இழைத்த தவறையும் விமர்சன அணுகு முறையோடு கற்று வளர் திசையின் படிக்கற்களாக மேலும் அவரது படைப்புகள் வெளிவர வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகவுள்ளது .

*******

பக்கம் 30 தொடர்ச்சி ஏசந்தியாகோ....

என்ற கட்டுரையில் என்ன சொல்லி இருக்கிறார் என்பதை உண்மையில் என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.தேவமுகுந்தனின் சிறுகதைத் தொகுப்பான " கண்ணீரினூடே தெரியும் வீதி" என்ற நூலை மேமன் கவி மீள்பார்வை செய்கின்றார். யாழ்ப்பாணத்து இளைஞன் ஒருவனுக்கு பல்வேறு இடங்களில் ஏற்படும் அனுபவங்களை இந்நூல் விளக்குகிறது. சம்பிரதாய செயன்முறை விமர்சனத்திலிருந்து சற்றே விலகிப்போய், சமகால போக்குகளான மூலப்படைப் பாளியை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு தன் சுய தோற்றப்பாடுடன் (மேமன்கவி) மீள் வாசிப்பு செய்கிறார்.

பின் கட்டமைப்பியலால் கவர ப்பட்ட அநேக இளம் வாசகர்கள், அதன் போக்கைத் தாய்லாந்து சஞ்கிகைகள் மூலம் அறிந்துள்ளதால் இக்கட்டுரையை இரசிப் பார்கள். ' தலித்' இலக்கியங்களை ஊக்குவிக்கும் ' தீராநதி' எனும் இந்தியச் சஞ்சிகையில்பிசுரம்செய்யப்பட்ட இலங்கைக் கவிஞர் சோலை க்கிளியின் கவிதை இச் சஞ்சிகையில் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. நதீம் மெல்லவீரவின் சிங்கள கவிதை யொன்றும் ' றலீனா ஏ ஹக்' என்பவரால் தமிழ்மொழிக்கு மொழி மாற்றம் செய்யபட்டு இச்சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மனமோகியின் இம்முதல் இதழை இப்பத்தியாளர் விரும்புகிறாரோ இல்லையோ இப்படி யாக மாறுபட்ட சஞ்சிகைகளில் எளிதில் காணக்கூடிய குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், எதிர்வரும் இதழ்கள் இலக்கியத்தைப் பற்றி எழுதுவதிலும், அறிவிப்பதிலும், விளக்குவதிலும், தன் சொந்தக் காலில் நிற்க உதவலாம். இச்சஞ்சிகை சகல வெற்றிகளும் பெற நாம் வாழ்த்துகிறோம்.

40ம் பக்கத் தொடர்ச்சி.......

துளசி ஆக்ரோசமாகக் கத்தினாள். கோமதி சில நிமிடங்களுக்கு வாயடைத்துப் போனாள். பிறகு நிலைமை விபரீதமாகப் போகப் போவதை உணர்ந்து கொண்டவளாய்,

" என்ன செய்யிறது துளசி, வாழ்க்கை எண்டால் அப்பிடி இப்பிடித்தான் இருக்கும்.

பொம்பிளையள்தான் ஒரு மாதிரி சமாளிச்சு விட்டுக் குடுத்து கெட்டித்தனமா வாழோணும்...."

" இஞ்சை பார் நான் இருபத்தைஞ்சு வருசமா உன்ரை கொப்பரோடை வாழேல்லையே?"

என்று சமாளிக்கும் வகையில் பேசினாள்.

"அம்மா நீங்கள் வாழுறது ஒரு வாழ்க்கையே?

நீங்கள் வாழுறதை அதுக்கு பேர் வாழ்க்கையெண்டு மட்டும் சொல்லாதைங்கோ,

திருமணம் எண்ட பேரிலை ஒரு அடிமை சாசனம் எழுதி, அதுக்கு வாழ்க்கை எண்டு ஒரு பெயர் வைச்சிருக்கிறீங்கள். எனக்குப் பிடிக்காத, எனக்கு சந்தோசம் தராத வாழ்க்கையை நான் வாழோணுமெண்டு ஏன் என்னைக் கட்டாயப் படுத்திறீங்கள்?"

மிகவும் எரிச்சலுடன் துளசி சத்தம் போட்டாள்.கோமதிக்கு ஒன்று மட்டும் தெரிந்தது

பதினாறு வயதில் கதைத்தே துளசியின் காதலைக் கத்தரித்தது போல, துளசியின் இருபத்து நாலு வயசில் துளசியைக் கதைத்து வெல்லுவது சுலபமான விடயமல்ல என்பது.

கட்டுபாடுகள், அதனால் வந்த ஏமாற்றங்கள் மட்டும் என்றில்லாமல், புலம்பெயர் மண்ணின் பல்கலைக் கழகப படிப்பும் துளசியைப் புடம்போட்டு எடுத்திருந்தது.



# Not without my Daughter .

## என்ற நாவல் - ஒரு பார்வை

- ஆர்.என்

மேற்படி ஆங்கில நாவலொன்று அண்மையில் எனக்கு வாசிக்கக் கிடைத்தது. 1988 ஆம் ஆண்டு வெளிவந்த நாவலாக இருந்த போதும் சமகால இஸ்லாமிய — அமெரிக்க முரண்பாட்டைக் கூறும் Betty Mahmoody என்பவருடைய உண்மை கதை இது. அவரே இந்த நாவலை William Hoffer என்பவருடைய துணையுடன் படைத்துள்ளார். இந்த நாவல் பின்னர் அதே பெயருடன் ஆங்கில திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. ஆனால் நாவலை வாசித்த போது கிடைத்த சுவையும், அனுபவமும் அந்த திரைப்படத்தைப் பார்த்த போது வரவில்லை. இந்த நாவலை ஏன் உங்களை வாசிக்கச் சொல்கின்றேன் என்றால் அமெரிக்க சிந்தனைக்கும்- ஈரானிய சிந்தனைக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டை சித்தரிக்க இந்த நாவல் முயற்சிக்கின்றது. இந்த சித்தாந்தப் போர் எப்போதோ ஆரம்பமாகிவிட்டது. அதனுடைய தொடர்ச்சி தான் இப்போது யுத்த வடிவத்தில் ஆரம்பமாகி இருக்கின்றது.

ஆனால் ஈரானிய கலாச்சார பரிமாணங்களை இக்கதை ஓரளவு எமக்கு காட்டுகின்றது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்குமான அரசியல்சித்தாந்த ரீதியான யுத்தமே இக்கதை. ஈரானின் பெண்களின் நிலை எவ்வாறு காணப்படும் என்ற அனுமா னத்தையும் தர முயல்கின்றது.

கதை முழுதுமே ஒரு அமெரிக்க பெண் ஒரு ஈரானிய இஸ்லாமிய அமெரிக்கக் குடிமகனை திருமணம் முடித்தமையினால் ஏற்பட்ட விளைவுகள் சித்தரிக்கப்படுகின்றன. குறிப்பாக செப்டம்பர் 11 அமெரிக்க வர்த்தக மையம் தகர்க்கப்பட்டமையும், அதன் பின்னரான அமெரிக்காவின் இஸ்லாமியர்க்கு எதிரான யுத்தமும் எவ்வாறாக இஸ்லாமியர்கள் மனதில் அமெரிக்காவுக்கு எதிரான மனப்போக்கினை தூண்டிவிட்டுள்ளது என்பதன் முன் நிகழ்வாக இக்கதை உணர்த்த முற்படுகின்றது. ஆனால் இக்கதையில் பல விஷயங்கள் எந்தளவுக்கு உண்மைத் தன்மையானது என்பது கேள்வியாக எம் முன் நிற்கின்றது. இக்கதையை நீங்கள் வாசித்தால் இது பற்றி எமக்கு எழுதுங்கள்.

# இந்த சிருஷ்டி அழகானதா?

**இரா. சடகோபன**

அந்திக் கருக்கல்
அண்மித்துக்
கொண்டிருந்தது
தொடு வானத்துக்கப்பால் சூரியன்
சிவந்து கொண்டிருந்தான்.
மாலை தென்றல் மந்தகாசமாக
சாமரம் வீசிக் கொண்டிருந்தது.
மலைகள் கூட மங்கைகள்
மல்லாந்து படுத்திருப்பது போல்
தம்மார்பை மதர்த்து விம்மிக்
கொண்டிருந்தன.
அடிவாரத்தில் ஆறுகள்
அமைதிகாத்து ஊர்ந்து
கொண்டிருந்தன.
தேன் சிட்டுக்கள் தேனுறிஞ்சி
கீச்.... கீச் .... என கெக்கரித்தன.
இந்த சிருஷ்டி எத்தனை
அழகானது ?.
இந்த இயற்கைதான் எவ்வளவு
ரம்மியமானது?
ஆனால்
மனிதன் அழகிய சிருஷ்டியா?
அவன் உள்ளத்தில்
கள்ளம் இல்லாதிருந்தால்....
அவன் உதட்டில்
வஞ்சனை வராதிருந்தால்....
பொறாமை பொங்காதிருந்தால்....
நெஞ்சினில் வெஞ்சிமை
விஞ்சாதிருந்திருந்தால்....
நான் எனும் ஆணவம்
நஞ்சாகிப் போகாதிருந்தால்....
மனிதனும் அழகிய சிருஷ்டிதான்

இந்த பிரபஞ்சம் அழகானதா?
அந்தகாரம் அங்கே
ஆட்சி செய்யாதிருந்தால்....
சூரியன் கொதித்து
கோபிக்காதிருந்தால் .....
விண்கற்கள் இங்கு வந்து
மண் மீது விழாதிருந்திருந்தால்.....
நட்சத்திரங்கள் வந்து
நம்மீது மோதாதிருந்தால்....


ஓசோனில் ஓட்டையொன்று
ஏற்படாமல் விட்டிருந்தால்...
சந்திரனிலும் செவ்வாயிலும்
தண்ணீர் கொஞ்சம்
படைத்திருந்தால்....
சந்திரனும் சூரியனும் வியாழனும்
வெள்ளி சனி ராகு கேது என்பவை
நம் விதி தன்னில் சதி செய்து
விளையாடாமல்விட்டிருந்தால்....
ஈர்ப்புச் சக்தியென்ற
இடைத் தங்கள் நிலையொன்றை
இல்லாதொழித்து
எல்லாக் கிரகங்களும்
இயல்பாக இருந்திருந்தால் ...
இந்த பிரபஞ்சம்
அழகாக இருந்திருக்கும்.
இந்த உலகம் அழகானதா?
நாடுகளுக்கிடையில்
எல்லை என்ற
ஒன்று இல்லாதிருந்தால்....
அமெரிக்கா என்றொரு
ஏகாதிபத்தியம் உருவாகாமல்
இருந்திருந்தால்....
நான் வல்லரசு என்ற மமதை
நாடுகளிடையே
தோன்றாதிருந்திருந்தால்....
பொருளாதாரம் என்ற பேரரக்கன்
நாடுகளின் முது கெழும்பை
முறிக்காதிருந்திருந்தால். ...
பணம் என்ற சாட்டை கொண்டு
ஏழை மக்கள் இடுப்பொடித்து
வெண்கொற்ற குடை கொண்டு
கோலோச்சி கொடி பிடித்தோர்
மேன்மக்கள் மகிமையினை
தம் அதிகாரக் கொடுமைக்கு
பரிசெனவே பலி கொடுக்கும்
பண்பற்ற அரசாட்சி
பாரினில் தோன்றாதிருந்திருந்தால்
இந்த உலகம்
அழகாக இருந்திருக்கும்.






மனதைக் கொள்ளைக் கொண்ட 'மனமோகி' காத்திரமான படைப்புக்களுடன் காலாண்டு இதழாக மலர் விரிப்பைக் கண்டு மனம் கொண்டேன். மனமோகி குறிப்பிட்ட வட்டத்துக்குள் நில்லாமல் பரந்துபட்ட கருத்தாக்கங்களுக்கு தனது பார்வையை செலுத்த வேண்டும். அதன் விலை குறிப்பிடாதது பெரும் குறையே. அதன் எதிர்காலத்துடன் கனவுகள் வரலாறாக பேசப்படுமென வாழ்த்துகின்றேன்.

- உடப்பூர்
வீரசொக்கன்



ஈழத்தின் தமிழ் இலக்கிய உலகில் இன்னுமோர் சிற்றிதழ் உலா வரத் தொடங்கியுள்ளதைக் காணும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. கண்டி தமிழ்ச்சங்கத்தின் தலைவர் திரு. ரா. நித்தியானந்தனை ஆசிரியராகக் கொண்டு மனமோகி காலாண்டு இலக்கிய சஞ்சிகையாக உதயமாகியுள்ளது. ஆசிரியர் தன் அறிமுகத்தில் வெளிப்படுத்தியுள்ளது போல் 'படைப்பவனுடைய மனதையும் வாசகனுடைய மனதையும் மோகிக்க வருகின்ற ஓரிதழாக' மனமோகி சஞ்சிகை உலகில் வலம் வர, தமிழ் இலக்கிய ஆர்வமுள்ள சகலரும் தமது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டியது மிக மிக அவசியம்



கண்டி ஏ.சந்தியாகோ
390, செமனேரிவத்த,
தென்னக்கும்புர.

மனமோகி வாசித்து மனமுவந்தோம் - அதன்ஆசிரியர் எம்மூர் என்றதும் மிக வியந்தோம்! இலக்கியத் தாகம் கொண்டோர்க்கு இனியதொரு பானம் ........ எட்டட்டும் அதன் புகழ்தொடு வானம், கிட்டட்டும் இறைவன் அருள் எந்நாளும் என வாழ்த்தி நிற்குது



சிபானா இஹ்திஷாம்
'டெய்லி நீட்ஸ் சென்டர்'
பலகொல்ல, கெங்கல்ல.

மனமோகியின் வருகைக்கு எமது வாழ்த்துக்கள். மேமன்கவி எஸ். சுதரசன், மாரிமகேந்திரன் என்போரின் கட்டுரைகள் மிக நன்று. நலினா ஏ ஹக், அனுகூலன், இஃபால் அலி கவிதைகளும் சிறப்பாக இருந்தன மறைந்து கிடக்கும் இளம் படைப்பாளர்களின் இலக்கிய பணி சிறக்க எனது வாழ்துக்கள்.




ஆர். காயத்திரி,
கல்லடி,
மட்டக்களப்பு

மனமோகியின் எல்லா அம்சங்களுமே என்னை கவர்ந்தன. எழுத்து பிழைகளை தவிர்த்திருக்கலாம். சில கட்டுரைகள் மிக நீண்டு காணப்பட்டன.

தேவி இளங்கோவன்
பேராதனை வீதி
கண்டி




மனமோகியின் வருகைக்கு எமது வாழ்த்துக்கள். ஒன்று சொல்ல விரும்புகின்றேன். சிறு சஞ்சிகையின் அடிப்படை எண்ணக் கருவை புரிந்து கொண்டு எழுத்தாளர்கள் எழுதுவது அவசியம். மேமன்கவியின் விமர்சனம் மிக நன்றாகவே இருந்தது. சாஸ்திரியின் மௌனம் மிக நல்ல சிறுகதை. வாழ்த்துக்கள்.




ஆர்.சுசாந்தனி
கோணவல, திகன,
ரஜவெல்ல.

எழில் கொஞ்சும் மலையகத்தில் அழியாத தடம் பதிக்கும் ஆக்கங்கள் பல கூடி வர, மண்ணின் வாசனை மறவாமல் பாமரனும் படித்தறிய பார் புகழும் படைப்புகளை பாட்டாய், கதையாய், கவிதையாய், கட்டுரையாய், விபரக்கொத்தாய், விமர்சனமாய் விண்ணிலும், மண்ணிலும் வீரமுடன் எடுத்தியம்பும் பல " மனமோகிகள்" வரவேண்டும்! வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன் என் இதயம் நிறைந்து!

எ. றொபட் டேனியல்
41/5A,Dr.C.D.L. பர்ணாந்து மாவத்தை,
கண்டி.



மனமோகி சஞ்சிகையைக் கண்டேன். அனைத்து ஆக்கங்களும் நன்றாக படைக்கப்பட்டுள்ளன. எழுத்துப்பிழைகள் மிகஅதிகம் என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும். எதிர் காலத்தில் அதில் கவனம் எடுக்கவும். மற்றும்படி ரா. நித்தியானந்தன் கண்டி இரா. அ இராமன், எஸ். எஸ் ராஜேந்திரன் என்போர் முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.



ஏ.பி. பாலசிங்கம்.
எட்னா சொக்லட் கம்பனி,
வத்தளை.

சிறகு வெளியீட்டின் கன்னி வெளியீடான மனமோகி இதழ் கிடைக்கப்பெற்றேன்.மாற்றுச்சிந்தனைக்கான காலாண்டு இலக்கிய இதழாக மனமோகியை வெளிக் கொணர்ந்த ஆசிரியர் குழாம், சிறப்பான முறையில் வடிவமைத்து வெளியிட்ட அனைவருக்கும் முதலில் எனது வாழ்த்துக்கள். சாதாரணமாக வெளி வருகின்ற இலக்கிய சஞ்சிகைகளைவிட ஒரு படி மேலாக, புதிய கோணத்தில் சிந்திக்க வைக்கின்ற. மாற்றுக் கருத்துக்களையும் உள்வாங்கி ஏற்றுக் கொள்ளுகின்ற மனப் பக்குவத்தையும் எடுத்துக் காட்டுவதாக இச்சஞ்சிகை அமைந்துள்ளது.


இதில் இடம்பெற்றுள்ள, கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், சிறுகதைகள் அத்தனையும் அனைவரையும் சிந்திக்கத் தூண்டுவதாக அமைந்திருந்தன. ஏற்கனவே வெளி வந்த சில ஆக்கங்ளை சுட்டிக்காட்டி பிரசுரித்துள்ளமை ஒரு நேர்மையான இலக்கிய கர்த்தாவின் பண்புகள் எப்படியிருக்க வேண்டும் என்பதை இலக்கிய ஆர்வலர்களான எங்களுக்கு சொல்லாமல் கிரகிக்கவும், பிரமிக்கவும் வைக்கிறது.

ஆகவே, ஆசிரியரின் பணி மேலும் சிறப்பாக தொடரவும். காலக் கிரமத்தில் காலாண்டு சஞ்சிகை, மாதாந்தோரும் மனமோகி வெளிவர வேண்டும் எனவும் வாழ்த்தி நிற்கிறேன்.



பி.டி. பாலரட்ணம்,
76/டீ கிங் ஸ்ரீட்
கண்டி





மனமோகி
இலக்கிய சஞ்சிகை
இலங்கையின் இலக்கிய
வரலாற்றில்
பெயர் பதித்திட எனது
நல் வாழ்த்துக்கள்

## வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்

உப தலைவர் - மலையக மாணவர் கல்வி மேம்பாட்டு அமையம்

செயற்குழு உறுப்பினர் - கண்டி தமிழ்ச் சங்கம்


Devi
JEWELLERS
22Kt Sovereign
Gold Jewellers
38, D. S. Senanayake Veediya, Kandy
Tel/Fax: 081 2224110